பக்கங்கள்.

லோகாந்தரம் ... 137, 195, 251
வர்ணாஶ்ரம தர்மம் ... ... 540
வேரற்ற ஸம்ப்ரதாயம் ... 95
வேளிர் வரலாறு ... ... 533
ஸ்வதர்ம ரக்ஷணம் ... ... 536
ஸந்த்யாவந்தந ஸம்பந்தமான ஒரு விசாரம் .. ... 485
ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூப சிந்தனை ... ... 358
புஸ்தக விமர்ஶம் :—
அஷ்டப்ரபந்தம் ... ... 129
நாலடியார் ... ... 132
ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் 484
ஜநகநந்தினி ... ... 523
பூகோள ஸ்வரூபம் ... 519, 574
மஹாமஹோபாத்யாய பெருக வாழ்ந்தான் ரங்காசார்யர் 567
தத்வஜ்ஞானம் ... ... 507, 550
வதூவித்யாவிசாரம் ... 296
வர்ணாஶ்ரம தர்மாபிவ்ருத்தி ... 273
ஜநகநந்தினி ... 19, 120, 204, 262, 321, 369, 405, 453

பக்கங்கள்.

ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள் ... 215
ஸாத்விக ராஜஸ அஹங்காரங்கள் 340
ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும் ... 113, 170
ஸ்ரீ அஹோபில மடம் ... ... 352
ஸ்ரீ தேசிகப்ரபந்தம் - பதவுரை (அம்ருதரஞ்ஜநீ) ... 464, 502
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் சரித்ர ஸங்க்ரஹம் ... ... 419
ஸ்ரீ பாஞ்சராத்ரம் ... 77, 101
ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீவைஷ்ணவாசாரமும் ... ... 162
ஸ்ரீ மூல மந்த்ரார்த்தம் ... 529
ஸ்ரீ விஷ்ணுபக்தியின் ஆவஶ்யகத்வம் ... ... 177
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை (ஸ்ரீரங்கம்) ... ... 133
ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம் ... 428, 561
ஸ்ரீ ஹம்ஸஸந்தேஶம் - ஸஞ்சிகைகள் : ... 5, 7, 8.
ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் ... 424
ஹரிப்ரியாவிலாபம் ... 526

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

---

ஸம்புடம் 7.] நள ௵ ஐப்பசி ௴ [ஸஞ்சிகை 1.

---

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

*ஒரு விஷ்ணு ஸூக்தவிஷயமாக ஆர்யாபத்ராதிபர் யோசனை.*

1915-ம் வர்ஷம் ஜூன் மாஸம் ஆர்யா பத்ரிகையில் ருக் வேதம் முதல் மண்டலம் 154-வது ஸூக்தம் இங்கிலீஷ் படுத்தப்பட்டிருக்கின்றது. அது விஷ்ணு ஸூக்தம். அதனுடைய த்ரிமதஸ்தர்க்கும் பொதுவான ஸம்ப்ரதாயார்த்தத்தை நாம் ஆநந்த ௵ மார்கழி மாத ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கின்றோம்.

மேலெழுந்தவாறாகப் புலப்படும் ஸூக்தார்த்தம் ஆர்யா பத்ரிகையில் வெளிப்படுத்தப்பட்டது. ஸூக்தத்தின் முதல் வாக்யம்:— "பூமி ஸம்பந்தமான லோகங்களை அளந்த விஷ்ணுவினுடைய வீரகர்மங்களை நான் இப்போது வெளியிடுகின்றேன். மூன்றடிகளால் எங்கும் வ்யாபித்ததனால் விசேஷமாக ஸ்துதிக்கப்பட்ட

விஷ்ணு, நாம் அடையவேண்டுகின்றதோர் உயர்ந்த ஸ்தானத்தை நிலைநிறுத்துகின்றார்" என்றிப்படி மொழிபெயர்க்கப்பட்டது. மற்ற வாக்யங்களும் இவ்வண்ணமே ஆர்யாபத்ரிகையில் இங்கிலீஷ் படுத்தப்பட்டன.

இந்த ஸூக்தம் வேதத்தில் மந்த்ரபாகத்தைச் சேர்ந்தது. மந்த்ரம் மூடமான அதாவது மறைந்த அர்த்தங்களை உட்கொண்டது. ஸம்ப்ரதாயார்த்தம் அக்கருத்தை ப்ரகாசிப்பிக்கும்.

பதங்கள்மேல் ஏற்படும் அர்த்தமும் ஆஸ்திகரால் சிந்திக்கத் தக்கது. அதை எழுதிவிட்டு ஆர்யா பத்ராதிபர் சில யோசனைகள் செய்கின்றார். அவற்றை இங்கே ஸங்க்ரஹிக்கின்றோம்.

* * * * * *

ஸூக்ததேவதை ஸர்வவ்யாபியான விஷ்ணு. புராணகாலத்தில் உயர்த்தப்பட்ட ருத்ரனுக்கும் விஷ்ணுவுக்கும் நெருங்கிய ஸம்பந்தத்தையோ ஐக்யத்தையோ வேதம் ப்ரதிபாதிக்கின்றது. ருத்ரன் தாமஸ தேவதையானாலும் லோகஹிதம் செய்பவர். விஷ்ணுவினுடைய பரமானந்ததா ஸ்வரூபத்தை அவர் நெருங்குகின்றார். விஷ்ணுவானவர் லோகத்துக்கும் தேவர்க்கும் அநுகூலத்தில் ஸதா ப்ரவ்ருத்திக்கின்றார். ஆதலால் அவர் துர்க்கஸ்தலங்களில் ஸஞ்சரிக்கும் ஸிஹ்மத்துக்கு ஒப்பிடப்படுகின்றார். அப்போது அவர் ருத்ரனைப்போலவும் ஆகின்றார். ருத்ரன் மருத்துக்களுக்குப் பிதா. 5-வது மண்டலம் முடிவான ஸூக்தத்தில் மருத்துக்களுக்கு விஷ்ணுவையும் மூலமாகச் சொல்லப்படுகின்றது. ருத்ரன் ப்ரபஞ்சத்தில் படிப்படியாய் உயர்கின்ற தேவன். உயர்கின்ற தேவர்களுக்கு உபகரித்து, அவர்களுக்கு உயரச் சக்தியைத் தரும் தேவன் விஷ்ணு.

ஐரோப்யர்கள், விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் அதிக ஸூக்தங்கள் ஏற்படாமையால், அவர்கள், வேதங்களில் மிகுதியாகக் கொண்டாடப்படாதவர்களென்று பகுகாலமாய்ப்ரமிக்கின்றார்கள். சிலர், சிவன் த்ராவிடர் தேவனென்றும், ஆர்யர் அத்தேவனைத் தம் மதத்தில் சேர்த்துக்கொண்டாரென்றும் சொல்வர்.

வேத தேவதைகட்குள் உத்கர்ஷம், அவர்க்கு ஏற்பட்ட ஸூக்தங்களின் ஸங்க்யையால் ஏற்படாது. அது அவர்களுக்குப் பொ

ருந்திய வ்யாபாரங்களால் நிச்சயிக்கப்படவேண்டும். வைதிக த மங்களில் அக்நி இந்த்ரன் முதலான தேவதைகட்கு ஸாக்ஷாத் ஸம் பந்தம் அதிகம். மருத்துக்களுக்கு ஸூக்தங்கள் அதிகமென்று அவர்களுடைய பிதாவான ருத்ரனைக் காட்டிலும் அவர்களுக்கு ஏற்றம் கூற அமையமாட்டாது. த்ரிமூர்த்திகளாய் வேதத்தில் விளங்கும் விஷ்ணு ருத்ரன் ப்ரஹ்மணஸ்பதி இவர் மூவரும் வேதக்ரியைகட்கு ஆதாரபூதர்களாய் இருந்து, பரோக்ஷத்தில் அவற்றிற்கு ஸஹாயம் செய்கின்றார்கள்.

ப்ரஹ்மணஸ்பதி சப்தத்தை அதாவது வாக்கை ஸ்ருஷ்டிக்கி றார்; தமஸ்ஸிலிருந்து ப்ரகாசத்தையும் ப்ரபஞ்சத்தையும் வெ ளிப்படுத்துகின்றார். சேதநனுடைய ஆவிர் பாவ க்ரமத்துக்கு அவர் காரணமாகின்றார். இவரைப் புராணங்களில் ப்ரஹ்மா என்று சொல்கின்றனர். ப்ரஹ்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு உயர் கின்ற சேதநர்க்குத் தக்கபடி ருத்ரன் பலம் அளிக்கின்றார். சேதந னுடைய சைதந்ய ப்ரகாசத்தின்பொருட்டு அவர் உபகரிக்கின் றார். அவர் கோபமுள்ளவர். எல்லாக் கேடுகளையும் நாசம் செய்ப வர். பாபிகளையும் எதிரிகளையும் அழிப்பவர். வேதருஷிகள் அவரிடம் பயம்கொண்டார்கள். இந்த ருத்ரபலத்தின் சிசுவாக அக்நி லோகத்தில் உதித்தார். புராணத்தில் ஸ்கந்தர் எனப்பட்ட வர் அக்நியின் அவதாரமே. இந்த ருத்ரனுக்கு ஒரு சாந்தமான ஆகாரமுமுண்டு; அவர் வ்யாதிகளைப் போக்குபவர்; துன்பம் களைபவர்; யுத்தங்கட்கு உதவுவது அவர் பலம்; முடிவில் ஸமா தாநத்தையும் ஸந்தோஷத்தையும் தருவதும் அவர் பலம்; அவர் பரமயோகி; புராணங்களில் இவரைத்தான் சிவன் என்பார்கள்.

ப்ரஹ்மணஸ்பதியினுடைய சப்தங்கள் ரூபமெடுக்கவும், ருத் ரனுடைய பலம் வ்யாபாரவத் ஆகவும், நிலைத்த ஆதாரமாக விஷ்ணு இருக்கின்றார்; அதாவது தேசமும் (Space,) லோகங்களினு டைய ஸஞ்சார நியமங்களும், ஸ்தாநங்கட்குப் படிப்படியாக ஏற் பட்ட ஏற்றங்களும், பரமபதமும் அவருடையன. அவர் மூன்று அடிகளை வைத்தார்; அவ்வடிகளின் வைப்பால் ஏற்பட்ட தேச விசேஷத்திற்குள் ஸர்வலோகங்களையும் நிலைநிறுத்தினர். ஸர்வ வ்யாபியான அவர் அந்த எல்லா லோகங்களிலும் இருக்கிறார். எல்லாத் தேவர்களும் தம்தம் வ்யாபாரங்களைச் செய்வதற்கு அவர்

ஸஹகரிக்கின்றார். ஆநந்தம், ஜ்யோதிஸ், ப்ரியம்பதம் இவற்றால் அமைந்த அவருடைய பரமபதமானது ப்ரகாசிக்கின்றதோர் நேத்ரத்தைப்போல ஆகாசத்தில் பரவியிருக்கின்றது. அதை ஸூரிகள் தர்சிக்கின்றார்கள். வேதநிர்திஷ்டமானதும் ஸர்வசேதநர்களுடைய ப்ரயாணத்தின் பாரமாகவும் விஷ்ணுவின் பரமபதம் இருக்கின்றது. அந்த விஷ்ணு தான் புராணத்தில் நாராயணனெனப்படுகின்றார்.

வேதருஷிகள் ஒரு தேவனைத்தான் உபாஸித்தார்கள். மற்றைத் தேவர்கள் அவ்வவர்க்கு நியதமாக ஏற்பட்ட ப்ரபஞ்ச வ்யாபார பேதங்களால், ஒரு தேவனுடைய பல மூர்த்திகளாய்ப் பாவிக்கப்பட்டனர். ஒவ்வொரு தேவனும் மற்றெல்லாத் தேவாம்சங்களையும் தனக்குள் அடக்கினவர். வைதிக க்ரியைகளில் ஒவ்வொரு தேவனுடைய வ்யாபாரமும் பேதித்தது. அதனால் அவர்க்குப் பல ரூபங்கள் அமைந்தன. உபநிஷத்துக்களில் ஓரே ஈச்வரன் ப்ரதிபாதிக்கப்பட்டான். மற்றைத் தேவர்கள் தாழ்த்தப்பட்டனர்.

*  *  *  *  *  *

மேலெடுத்த ஸூக்ததேவதை விஷ்ணு. அவர்க்கே உரிய மூன்றடி வைப்பின் மஹிமையானது அதில் ஸ்துதிக்கப்பட்டது. இங்கே விஷ்ணுவின் வாமநாவதாரமும், த்ரிவிக்ரமத்வமும் பூமி தேவலோகம் பாதாளம் இவற்றை அவருடைய அடிவைப்பால் மூடப்பட்ட கதையும், மஹாபலி கதையும் யோசிக்கப்படவேண்டியதில்லை. ஸூக்தத்தில் பூமி, ஆகாசம், த்ரிதாது, இவற்றைத் தான் விஷ்ணு ஆக்ரமித்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றின்மேல் 'நாகஸ்ய ப்ருஷ்டே' அதாவது, தேவலோகத்திற்கும் மேலே இருப்பதுதான் விஷ்ணுவினுடைய பரமபதம் என்று ஏற்படுகின்றது.

ஈசோபநிஷத்தில், 'ஸ பர்யகாத்' [அதாவது, அவர் எங்கும் பரவினார்] என்று சொன்னது விஷ்ணுவைப்பற்றினது. ஈக்ஷணம் செய்தும், யோசித்தும், (வ்ருத்தி, ஸம்ஸ்ரு) ரூபங்களை உண்டாக்கியும், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியான அவரே ஹ்ருதயரூபமான ஆகாசத்திலும், அஹங்காரரூபமான பூமியிலும் விஸ்தரித்தார்.

இதைத்தான் 'த்ரேதா விசக்ரமே' [அதாவது, மூன்று விதமாக விக்ரமணம் செய்தார்] என்று சொல்லப்பட்டது. இப்படி அவர் விக்ரமணம் செய்து, அதனால் விஸ்தரித்த ஸர்வலோகங்களையும் அவரே உண்டாக்கினவர். நாம் வஸிக்கின்ற பூமியானது ப்ராண மநோமயங்களான விசேஷ லோகங்களுக்குப் போக முதற் படிக் கட்டென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால் ஒவ்வொரு சேதநனும் பூமியை அடைந்து, பின்னால் அந்தரிக்ஷத்தையும் தேவலோகத்தையும் க்ரமமாக அடைகின்றான். விஷ்ணு தமது மூன்று விக்ரமணங்களால் இம்மூன்று லோகங்களையும் வ்யாபிக்கின்றார்.

அவற்றின்மேல் இருப்பது விஷ்ணுவினுடைய பரமபதம். அதைச் சேதநன் முடிவில் அடைகின்றான். ஆதலால் விஷ்ணுவினுடைய விக்ரமணங்களுக்குள் பூமி, அந்தரிக்ஷம், தேவலோகம், மஹர்லோகம், பரமபதம், இவற்றில் உள்ள சேதநா சேதநரூப ஸர்வ பதார்த்தங்கள் இவை யாவும் அடங்குகின்றன.

மநுஷ்யனுடைய ப்ராணன் மஹாசக்தி பொருந்திய ருத்ரனிடமும், அவனுடைய மநஸ் ப்ரஹ்மணஸ்பதியாகிய ஸ்ருஷ்டிகர்த்தாவின் வாக்கினின்றும் உண்டாகி, அவனுடைய மஹாப்ரயாணத்தில் அந்வயித்து, மேன்மேல்சென்று, பரமபதத்திலிருக்கும் விஷ்ணுவினிடம்போய் நிலைக்கத்தக்கன. விஷ்ணுதான் ஸர்வ வ்யாபி; லோகத்தில் ஸர்வ சக்திகளின் ப்ரவ்ருத்திகளையும் ஸர்வ ப்ரத்யயங்களையும் தழைக்கச்செய்பவர் விஷ்ணுவே; அவற்றின் போக்தாவும் அவரே. அந்த ஸர்வ சக்தனை அநந்தனுடைய மூன்று அடிவைப்பால், நமது உண்மையான நிலைமை நாம் அடைவதற்கென விஸ்தரித்த இந்த ஸர்வ ப்ரபஞ்சமும் அளக்கப்பட்டன.

மூன்றடிவைப்பால் அளக்கப்பட்ட த்ரிலோகமும், ஆநந்தமெனும் மதுவால் பூர்ணமாயிருக்கின்றன. விஷ்ணுவானவர் அவற்றுளெல்லாம் தம்முடைய ஆநந்தத்தைப் பெருகச்செய்கின்றார். அதனால் அவை சாச்வதமாய் தரிக்கப்படுகின்றன; யாவும் ஒத்துத் தம்தம் ஸ்வபாவங்கட்குத் தக்கபடி ப்ரவ்ருத்திக்கின்றன; எங்கும் பரவி எல்லையற்ற தமது ஸத்தையால் களிக்கின்றன; அவ

ற்றை விஷ்ணு என்றென்றும் தரிக்கின்றார்; அவற்றிற்குக் கேடின்றிக் காக்கின்றார். பரமார்த்ததத்வம் அவர் ஒருவரே. என்றும் நிலைத்த தேவன் அவரே. மூன்று விதமான தெய்வத்தன்மைகளை, நாம் ஊன்றி நிற்கும் பூமியிலும், நாம் மநஸ்ஸால் ஸாக்ஷாத்கரிக்கும் திவத்திலும், ஆநந்தமயமான பரமபதத்திலும், நாம் க்ரமமாக அடைகின்றோம். இவை யாவையும் விஷ்ணு தமக்குள் தரிக்கின்றார். இத்தன்மைகளைத் தான் வேதாந்தத்தில் 'ஸச்சிதாநந்தம்' என்பார்கள். ஜீவிக்கும் வஸ்துக்கள் யாவும் இவை மூன்றையும் தரதமபாவத்தால் உடைத்தாயிருக்கின்றன. நம்முடைய ப்ரயாணத்தின் முடிவில் அவற்றை நாம் பூர்ணமாய்ப் பொருந்துகின்றோம்.

விஷ்ணுவின் முடிவான பதமானது ஆநந்தமே. அவ்வாநந்தமயமான லோகத்தில் முக்தனான ஜீவன் ப்ரஹ்மாநந்தத்தை அநுபவிக்கிறான்; எல்லையற்ற ஜ்ஞாநத்தின் விகாஸத்தைப் பொருந்துகின்றான்; தனது ஶாஶ்வதமான ஸத்தையையும் அறிந்துகொள்கின்றான். ஸத்தாரூபமான மதுவுக்கு அது உத்பத்தி ஸ்தாநம். அம்மதுவால் விஷ்ணுவின் மூன்றுபதங்களும் நிறைந்திருக்கின்றன. அந்தப் பரமபதத்தில் ஸர்வேஶ்வரன் இருக்கின்றான்; அவன் அவனைப் பஜிக்கும் சேதநர்க்கு மித்ரனும் ஹிதனுமாவன். ப்ரபஞ்சத்தை வ்யாபிக்கும் விஷ்ணுவானவர் பரமபதத்தில் நிஶ்சலனாய் ஸ்வஸ்வரூபத்தில் நிலைக்கின்றார்.

இங்கே, ப்ரபஞ்சமெங்கும் உள்ளும் புறமும் வ்யாபித்து நிற்கும் விஷ்ணுவே, அங்கே பரமபதத்தில் என்றும் நிஶ்சலமாய் நிர்விகாரமாய் ஆநந்தாநுபவம் செய்யும் தேவனாயிருக்கின்றார். இப்படி இரண்டு ரூபமாய் அவர் வஸிக்கும் நித்யவிபூதி லீலாவிபூதியென்னும் ப்ரதேசங்களே, அந்த ஸச்சிதாநந்தமயனுடைய மூன்றடிவைப்பால் கொள்ளப்பட்ட மூன்று லோகங்கள். நாம் படிப்படியாய் ஸர்வவித ப்ரயத்நத்தாலும், ஜ்ஞாநாநந்தாநுபவத்தில் உயர்ந்துகொண்டே ப்ரயாணிக்கும் நீண்ட மார்க்கத்தின் முடிவில் நமக்குப் பரமப்ராப்யமாகவும் ஆஶ்ரயமாகவும் நாம் விரும்புகின்ற பகவான் விஷ்ணு.

அந்தப் பரலோகங்களில் விபுவாய், பூர்ணமாய், அநந்தமாய், ஜ்யோதிர்மயமாய், பகவானுடைய பரம்பதமாய், ஸர்வ வ்யாபியினுடைய ஸர்வோத்க்ருஷ்டஸ்தாநம் இருக்கின்றது. ஸர்வ சேத

னர்க்கும் ஸ்வாமியாய், ப்ராபகனுய், ஸர்வவ்யாபியாய், ஸர்வ ஜகத்பதியாய், நம்முடைய ஆத்மாக்களுக்கு ப்ரியனுய், ஹிதனுய், உயர்வற உயர்நிலைக்கீசனுய், பரிபூர்ணுநந்தஸ்வரூபியாய் இருக்கும் விஷ்ணுவினுடைய பரமஸ்தாநம் அது.

*  *  *  *  *  *

ஸூக்தார்த்த விவரணம் இவ்வண்ணம் ஆர்யா பத்ராதிபரால் செய்யப்பட்டது. அதைப்பற்றி நாம் குற்றம் சொல்வோமில்லை. 'பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி - த்ரிபாதஸ்யாம்ருதம் திவி' எனும் வண்ணம் நித்ய நிர்விகாரமான பரமபதமும், ஸதாவிகாரியான ப்ராக்ருத லோகங்களும் பகவானுக்குள் அடங்கியவை; பகவானை ஆதாரமாயுடையனவே; பகவானுடைய சரீரங்களே. 'உத அம்ருதத்வஸ்யேஶாந: - யதந்நேநாதிரோஹதி' எனும் ப்ரகாரம் மோக்ஷப்ரதனுகிய அச்யுதனே இந்த லோகங்கள் ரூபமாய் எங்கும் பரவியிருக்கின்ருன் எனப்பொருந்தும்.

அவனுடைய த்ரிவிக்ரமத்வம் இவ்வளவு அர்த்தத்துக்குத்தான் இடம் தருமென்று வைத்துக்கொள்வதில் தோஷமில்லை. ஆகிலும், 'ஶரீராத்ரயாதநாவ்யயாந' எனும் சப்தங்கட்கு அபரிமிதமான சரீரத்துடன்கூடிப் பகவான் விஸ்தரித்தார் எனப் பொருள் ஸித்திப்பதால், பூர்வம் வாமனுய் இருந்து பின்பு த்ரிவிக்ரம ரூபத்திற்கேற்றதும் விஶ்வத்தை உள்ளடக்கத்தக்கதுமான திவ்யரூபத்தைப் பகவான் தரித்தார் எனும் கதையை அத்யந்தம் நிராகரிப்பதேனே? பகவானுடைய மேற்சொன்ன கதைக்கு வ்யாஜமாக மஹாபலியும் வேண்டியிருக்கின்றதே.

இக்கதை ஸம்பாவிதமன்று என்னக்கூடும். கதையின் உண்மை எப்படியிருந்தபோதிலும், ஸூக்தங்களுடைய த்ரஷ்டாக்களான ருஷிகள் அக்கதையை நம்பினவர்கள் என்பதை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? வேதங்களின் மந்த்ரபாகங்கள் பூர்வம் நடந்ததாக நம்பப்பட்ட சரித்ரங்களைக் குறிக்கின்றனவே.

*  *  *  *  *  *

இதிஹாஸமும், புராணமும் வேதங்களுடன்கூடி வளர்ந்தனவென்பதற்கு ஶ்ருதியே ப்ரமாணமென்று பலதரம் சொன்னேம்.

நமக்கு இப்போது கிட்டியிருக்கின்ற வேதபாகங்களைக் காட்டிலும், இப்போது இல்லாத வேதபாகங்களும் முன் இருந்தன. காடகத்தில் பரத்வாஜ வ்ருத்தாந்தத்தால் வேதங்கள் அநந்தங்கள் என்று தெரிகின்றது.

வேதங்களை வ்யாஸம்செய்த க்ருஷ்ணத்வைபாயநர், மஹா பாரதத்துக்கும் புராணங்கட்கும் கர்த்தாவெனும் ப்ரஸித்தி யாவரும் அறிந்ததே. வேத பாகங்களில் பூர்வகாலத்தில் அந்தர்கதங்களாயிருந்த இதிஹாஸ புராணங்களையே அவர் தனியாக மஹா பாரதரூபமாயும், பல புராணங்கள் ரூபமாயும் செய்திருக்கவேண்டும்; செய்வித்தாவ திருக்கவேண்டும்.

அவர் காலத்தில் இருந்தவண்ணம் அவை இப்போதில்லையென்பதை நாம் ஒப்புக்கொள்வோம். அதிக பாகங்கள் பின் காலங்களில் அவற்றுள் சேர்க்கப்பட்டிருக்கலாம். சில விடங்களில் மாறுதலும் உண்டாயிருக்கலாம். தத்காலம் இதிஹாஸ புராணங்களில் காணும் கதைகள் யாவும் வேதாவிர்பாவ காலங்களில் இல்லையென்பது ஸயுக்திகமாய்த் தோன்றவில்லை.

ஆதலால் த்ரிவிக்ரமாவதார வ்ருத்தாந்தத்தை முற்றிலும் த்யாகம் செய்வது ந்யாய்யமன்று.

* * * * * *

அரவிந்தகோஸ்செய்த யோசனைகளால் ஜகத்காரணனும், நித்யவிபூதிநாதனும், முக்திப்ரதனும், ஸர்வாந்தர்யாமியும், ஸர்வவ்யாபியும், ஸர்வ பூதஹிதனும், ஸூரிகளால் த்யாநிக்கப்பட்டவனும் நாராயணனென்று நிச்சயிக்கப்படுகின்றது. ப்ரஹ்மாவும் சிவனும் அவனுடைய விபூதிகளே. அவர்களுடைய ப்ரபஞ்ச ஸம்பந்தமான வ்யாபாரங்களும் நாராயணனுடைய ஸஹாயத்தால் நடப்பவையென்று ஆர்யா பத்ராதிபருடைய அபிப்ராயம்.

* * * * * *

நம்முடைய வைதிகமதமானது Cosmic events எனப்பட்ட ப்ரபஞ்ச சரித்ரஸம்பந்தமாக வளர்ந்தது. பூமியில் இப்போது இருப்பவரை இருப்பவராக வைத்துக்கொண்டு, செத்தவரையெல்லாம் செத்தவராகவே வைத்துக்கொண்டு, ஈச்வரனையும்

அவன் தூதர்களையும் அவர்க்கு விரோதம் செய்யும் பிசாசுகளையும் மாத்ரம் ஒப்புக்கொண்டு, இந்த யாவத் ப்ரபஞ்சமும் சூந்யத்தினின்று ஆறாயிரம் வருஷங்கட்குமுன் உண்டானதாகச் சொல்லுகின்றவர்க்கு ப்ரபஞ்ச தத்வம் விளங்காது. ப்ராக்ருத சரீரங்களுடன்கூடிய சேதநர்கள், பூமியில் உள்ளவரோடு முடிவதில்லை. செத்தவர்களும் ஸூக்ஷ்ம சரீரங்களுடன் இருப்பவரே. ஆதலால் புண்ய விசேஷங்களால் ப்ரபஞ்சாதிகாரத்தில் நியோகிக்கப்பட்ட சேதநர்கள் தேவர்கள். தேவர்களுடைய லோகத்தில் புண்யம் செய்தவர்கள் நீண்டகாலம் ஸுகாநுபவம் செய்கின்றார்கள். அந்தரிக்ஷவாஸம் செய்பவரும் உளர். அந்த லோகங்களும் அவற்றில் உள்ளவர்களும் நம்முடைய கண்கட்குப் புலப்படார்கள். இவர்களுடைய அஸ்தித்வம் ஶாஸ்த்ரங்களால் அறியத்தக்கது; யோகிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டது.

ஈஶ்வரன் ஒருவன்; அவன் நித்யன். அவனுக்கு ப்ரக்ருதியென்றும், ப்ரகாரமென்றும், ஶக்தியென்றும், சரீரமென்றும் சொல்லப்பட்ட அநந்த சேதநர்களுடன்கூடிய எல்லையற்ற ப்ரக்ருதி மண்டலமும் என்றும் உள்ளதே. ப்ரபஞ்சம் முழுவதுமோ, அதன் ப்ரதேசங்களிலோ, ஆவிர்பாவ திரோபாவமெனப்பட்ட ப்ரபஞ்ச ஸங்கோச விகாஸாவஸ்தைகளை ஸ்ருஷ்டி ப்ரளயமெனச் சொல்வார்கள். இவை அவ்யுச்சிந்நமாய் ப்ரவ்ருத்திக்கின்றன. சேதநர்களுடைய கர்மம் காரணமாக ஈஶ்வரன் அத்யக்ஷனாக இவை நடக்கின்றன. இவற்றிற்கு ஆதியுமில்லை அந்தமு மில்லை.

ஶாஸ்த்ரங்களில் ஸ்ருஷ்டி யென்றும் ப்ரளய மென்றும் சொல்வதெல்லாம், மேற்சொன்னபடி இடைவிடாமல் தொடர்கின்ற ஸ்ருஷ்டிகளில், நமது பூமிக்கோ ஸூர்யமண்டலத்துக்கோ காரணமான ஸ்ருஷ்டியையும், அதற்கு முன்னிருந்த ப்ரளயதசையையும், பின்னால் உண்டாகப்போகின்றவையும் குறிக்கின்றன. அஸத்தினின்று ஸத் உண்டாகமாட்டாது. ஸத் அஸத்தாக என்றும் மாறமாட்டாது.

இப்படிப்பட்ட ப்ரபஞ்ச வ்யாபாரங்களையும், அவற்றை ஈக்ஷணம் செய்கின்ற ஸர்வேஶ்வரனையும், அவனுடைய நியமநத்தால் அவற்றுள் அந்வயிக்கின்ற அதிகாரி தேவதைகளையும் குறித்து ஸ்தோத்ரரூபமாக வேதமந்த்ரபாகங்கள் ஸாக்ஷாத்கரிக்கப் பட்

டன. ப்ரபஞ்ச வ்ருத்தாந்தங்கள் ஶாஸ்த்ரங்கள்விநா நம்முடைய புத்திகோசரங்க ளன்று. ஆதலால் அவற்றையும், அவற்றை விவரிக்கின்ற இதிஹாஸ புராணங்களேயும் அநாதரிக்கக்கூடாது. இதிஹாஸ புராணங்கள் இப்போதிருக்கும் நிலைமையில் சுத்தமாக வில்லேயென்று யோசிக்கக்கூடுமோனாலும், ப்ரபஞ்ச வ்யாபாரங்களேப்பற்றிச் சிந்திக்க நமக்கு அவையன்றி வழியில்லே யாகையால், ஸத் யுக்திகளால் அவற்றை விவேசநம்செய்து ஸமுதாயமாக அவற்றை ஆதரிக்கப்பொருந்தும்.

* * * * * *

ப்ரபஞ்ச வ்ருத்தாந்தங்கள், ஆதுநிக பதார்த்த ஶாஸ்த்ரங்களால் செம்மையாக அறியக்கூடுமென்றும், அந்த ஶாஸ்த்ரங்கள் புராணகதைகளே மித்யையாகக் காட்டுகின்றன வென்றும் சொல்வார்கள். பதார்த்த ஶாஸ்த்ரங்களுக்கு ஸஞ்சாரம் மிதமே. அவற்ருல் நிஸ்ஸம்ஶயமாக ஏற்பட்ட உண்மைகளேத் திரஸ்கரிக்கப் பொருந்தாது. அவ்வுண்மைகள் விரோதிக்கும்வரையில் இதிஹாஸ புராண கதைகள் தத்வமாகமாட்டா. பதார்த்த ஶாஸ்த்ரங்கள் ப்ராக்ருத விஷய பரிசோதனே செய்வதில், ஜீவன் நீங்கின சரீரசோதனேயை அநுஸரிக்கின்றன. ப்ரக்ருதிமண்டலத்தில் ஸர்வத்ர வ்யாபித்து பற்பல சரீரங்களுடன் கூடிப் பற்பல ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளில் அந்வயித்த சேதநர் தசைகளேப்பற்றின வரையில் பதார்த்த ஶாஸ்த்ரங்கள் அபதார்த்த துல்யங்களே.

ஆதலால் ப்ரபஞ்ச ஸ்வரூபத்தைப்பற்றியும், அதில் கட்டுப் பட்டுநின்ற சேதநர்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளேப் பற்றியும், இவற்றிற்கு ஆதாரமாயும் நியந்தாவாயும் ஸ்வாமியாயும் இருக்கின்ற ஸர்வேஶ்வரனேப்பற்றிய ஜ்ஞாநத்தைப்பற்றியும் ஶாஸ்த்ரமே ப்ரமாணமாய் நிற்கின்றது.

மேலே யோசிக்கப்பட்ட ஸூக்தம், உபய விபூதிகளுடையவும் அவற்றின் ஸ்வாமியான நாராயணனுடையவும் உண்மைகளே ப்ரகாசிப்பிக்கின்றது. இது, ஸூக்தத்தின் ஶப்த யோசனேயால் ஸித்திப்ப தென்பதை அரவிந்த கோஸ் காட்டினர். இதிஹாஸ புராண கதைகளே ஆதரித்த ஸம்ப்ரதாய யோசனேகளே நாம் முன் விவரித்தோம்.

# த்ரிதசாலயம்.

இப்படி இவர்கள் ஆறு தினம் வஸித்தபிறகு ஈசான்ய ப்ர தேசத்தினின்று வேகத்துடன் அடித்த காற்றானது ஆயிரம் தளத் துடன் கூடினதும் திவ்யகந்த முள்ளதுமான ஸௌகந்திகமெனும் புஷ்பவிசேஷத்தைக்கொண்டு பாஞ்சாலி நின்றவிடத்தில் எறிந் தது. அதை க்ருஷ்ணை எடுத்துப் பார்த்தாள். ஸந்தோஷித்தாள். பக்கத்தில் நின்ற பீமஸேனனைப் பார்த்து, "ஓ சத்ருக்களைத் தபிக் கச்செய்கின்றவரே! இந்தப் புஷ்பத்தை யுதிஷ்டிரரிடம் கொடுக் கப்போகிறேன். இம்மாதிரியாகப் பல புஷ்பங்கள் எனக்கு வேண்டும். அவற்றைக் காம்யக வநத்தில் நம்முடைய ஆச்ரா மத்துக்குக் கொண்டுபோவேன். என் ப்ரீதிக்காக வேறு புஷ்பங் களை ஸம்பாதித்துக்கொண்டு நீர் வரவேண்டும்" என்றனள். உடனே பீமஸேநன் புஷ்பம் வந்த திக்கை நோக்கிச் சென்றனன். செல்லும்போது கந்தமாதந பர்வதத்தின் ரமணீயங்களான தாழ் வரைகளில் ஸஞ்சரித்தான். பகு வநம்ருகங்களைக் கண்டு விரட்டி னான். பக்ஷிகளுடைய மநோஜ்ஞமான சப்தங்களைக் கேட்டு ஆநந் தித்தான். அநேக வ்ருக்ஷங்களையும் லதைகளையும் பிடுங்கி எறி ந்துகொண்டு சென்றான். அப்படிச் செல்லுகையில் ஒரு ரம்ய மான தடாகத்தையும், பொன்மயமான வாழைக் காட்டையும் கண் டான். அந்த ஸரஸ்ஸில் இறங்கி விளையாடினான். அதன் பரிசுத்த மான தீர்த்தத்தைப் பாநம்செய்தான். தோள்களைத் தட்டினான். ஸிம்ஹநாதம் செய்தான். கிரிகுஹைகள் அதன் ப்ரதித்வநியை உண்டாக்கின. அதைக் கேட்டுக் குஹைகளில் வஸித்த ஸிம் ஹம் முதலான காட்டு ம்ருகங்கள் மிகவும் கூவ ஆரம்பித்தன.

அவ்விடத்தில் நித்ரை செய்துகொண்டிருந்தார் ஹநுமான். அவர் நித்ரை பங்கமாயிற்று. விழித்தார். தம்முடைய வாலால் பூமியை அடித்தார். அந்த த்வநியும் அதனுடைய ப்ரதித்வநியும் எங்கும் பரவின. அதைக் கேட்டான் வ்ருகோதரன். சப்தம் உண்

டான இடத்தைத் தேடிக் கதளீவநத்தில் ஸஞ்சரித்தான். அங்கே ஒரு பாறையின்மீது உட்கார்ந்திருந்த பெரிய சரீரத்துடன் கூடிய வாநர ப்ஂரேஷ்டனைத் தர்ஶித்தான். அவர் மின்னல்கூட்டம் போல் ப்ரகாசித்தார். செந்தாமரைக் கண்களால் பீமஸேநனைப் பார்த்தார். பீமஸேநன் அவரை நெருங்கி ஸிம்ஹநாதம் செய்தான். அதைக் கேட்டு ஹநுமானும் கொஞ்சம் விழிகளைத் திறந்து பார்த்தார்; சிரித்தார்.

“ஸுகமாய்த் தூங்கின என்னை ஏன் எழுப்பினாய்? நீதெரிந்தவனுச்சுதே! பூதங்களிடம் நீ தயையைக் காட்டவேண்டுமன்றோ? மநுஷ்யர் புத்தியுள்ளவர்கள்; ஜந்துக்களிடம் தயை செய்கின்றனர். உன்போன்ற புத்திமான்கள் மநோவாக்காயங்களைத் தூஷித்துத் தர்மநாசம் செய்கின்ற க்ரூரகர்மங்களை அநுஷ்டிப்பார்களோ? உனக்குத் தர்மம் தெரியாது. நீ வ்ருத்தர்களை ஸேவித்தாயில்லை. அல்பபுத்தியால் வநம்ருகங்களை விரட்டுகின்றாய். நீ யார்? ஏன் இந்த வநத்துக்கு வந்தாய்? இது மநுஷ்யர் ஸஞ்சரிப்பதன்று. நீ எவ்விடம் போகின்றாய்? இப்பர்வதம் இதன்மேல் ஏறத்தக்கதன்று. ஸித்தருடைய மார்க்கம் தவிர வேறு மார்க்கம் இதன்மேல் கிடையாது. கருணையாலும் ஸ்நேஹத்தாலும் உன்னைத் தடுக்கின்றேன். இவ்விடம் வர உனக்கு நான் நல்வரவு அளிக்கின்றேன். இந்த அம்ருததுல்யமான மூலபலங்களை அருந்து. என் வார்த்தையைக் கேட்டுத் திரும்பிப்போகக்கடவாய்” என்று பீமஸேநனைப் பார்த்து ஹநுமான் சொன்னார்.

பீமஸேநன், “நீர் யாவர்? ஏன் வாநரரூபம் கொண்டீர்? நான் க்ஷத்ரியன்; ஸோமவம்சத்தில் குருகுலத்தில் வந்தவன். என் மாதா குந்தி. நான் வாயு தநயன். பீமஸேநனெனப்பட்ட பாண்டவன்” என்று சொன்னான்.

அச்சொற்களை ஹநுமான் சிரிப்புடன் கேட்டார். “நான் வாநரன். நீ இச்சித்த மார்க்கத்தைத் தருகின்றேனில்லை. புறப்பட்டுப் போ. துக்கத்தை அடையவேண்டாம்” என்று மொழிந்தார்.

அதைக் கேட்ட பீமன் “துக்கமானாலும் வரட்டும், மற்றதாகிலும் உண்டாகட்டும். அதைப்பற்றி உன்னைக் கேட்கின்றேனி

ல்லே. எழுந்திரு. எனக்கு வழியை விடு. நீ துக்கத்தில் விழாதே" என்றனன்.

ஹநுமான், "நான் வ்யாதியால் க்லேசப்பட்டவன். எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லே. அவச்யம் போகவேண்டு மானல், என்னேத் தாண்டிப்போ" என்று சொன்னர்.

பீமன் "ஸகல ஹேயகுண ரஹிதனை பகவான், மஹாவிபூதியுடன் கூடிய உனது சரீரத்தை வ்யாபித்து நிற்கின்ருன். ஜ்ஞாநத்தால் ஸாக்ஷாத்கரிக்கத்தக்க அந்த ஸர்வேச்வரனே உன்னேத் தாண்டி நான் அவமதிக்கத் துணியேன். ஸர்வ பூதங்களேயும் அந்தராத்மாவாயிருந்து ப்ரேரணம் செய்யும் புருஷோத்தமனே ஆகமங்களால் நான் அறியாமல் இருந்தால், ஹநுமான் ஸாகரத்தைத் தாண்டிச் சென்றதுபோல், நானும் உன்னேத் தாண்டிச் செல்வேன்" என்று சொன்னன். ஹநுமான், ஓ நரச்ரேஷ்ட! ஸாகரம் தாண்டின ஹநுமான் யார்?" என்ருர். பீமன், "அவர் என் தமையன். ச்லாக்ய குணங்கள் பொருந்தினவர். மஹாபுத்திமான். பலவான். அந்த வாநரச்ரேஷ்டர் ராமாயணத்தில் இவ்வண்ணம் க்யாதியாகச் சொல்லப்பட்டவர். ராமபத்நீ நிமித்தம் நூறு யோசனே விஸ்தாரமுள்ள ஸாகரம் அவரால் ஒரே தாண்டால் தாண்டப்பட்டது. அந்த மஹாவீரன் என்னுடைய ப்ராதா. தேஜஸ்ஸிலும், பலத்திலும், பராக்ரமத்திலும் நான் அவர்க்கு ஸமமானவன். உன்னே நிக்ரஹிக்க நான் சக்தன். எழுந்திரு. வழிவிடு. இல்லாவிட்டால் உனே எமலோகம் அனுப்புவேன்" என்று சொன்னன்.

பிறகு ஹநுமான், பீமன் பலத்தால் கர்வம் கொண்டவனென்று அறிந்து, "தயவுசெய். எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லே. என் வாலேயாவது தூக்கி எறிந்துவிட்டுப் போ" என்று சொன்னர்.

பீமஸேநன் ஒரு கையால் அவர் வாலேத் தூக்கப் போனன். அது எழவில்லே. இரண்டு கைகளாலும் வாலே அசக்கினன். அது அசையவில்லே. நெறித்த புருவங்களுடனும், சுழல்கின்ற கண்களுடனும், வியர்க்கும் தேஹத்துடனும் பீமன் செய்த ப்ரயத்நங்கள் வீணயின. வெட்கத்துடன் ஹநுமான் பக்கத்தில் வந்து நின்ருன். அவரை ப்ரணிபாதநம் செய்தான். கைகளேக் கூப்பிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தனன்.

"வாநர ஶ்ரேஷ்ட! தயவு செய்யும். நான் சொன்ன துருக்திகளை க்ஷமியும். நீர் ஸித்தனோ? தேவனோ? கந்தர்வனோ? குஹ்யகனோ? யாரோ சொல்லும். ஶிஷ்யனைப்போல் வினவுகின்றேன். மறைக்கக் காரணமில்லாவிட்டால், வாநரரூபதாரியான நீர் யார் என்று எனக்குச் சொல்லும்" என்றனன்.

பிறகு ஹநுமான் தான் இன்னாரென்றும், ராமாயண வ்ருத்தாந்தங்களை ராமாயணத்தில் சொல்லியிருக்கிறபடி ஸங்க்ரஹமாய் பீமஸேநனுக்கு அறிவித்தார். ராமகதை லோகத்தில் வழங்கும் காலபர்யந்தம் தான் லோகத்தில் ஜீவித்திருக்க ஸ்ரீராமனிடம் வரம்பெற்றதாயும், ஸீதையின் ப்ரஸாதத்தால் தனக்கு யாவத் போகங்களும் அம்மலையில் அமைந்திருப்பதாயும், அவ்விடத்தில் அப்ஸரஸ்ஸுகளும் கந்தர்வர்களும் ஸ்ரீ ராமசரித விஷயமான காநங்களை ஸதா செய்து தனக்கு ஸந்தோஷம் செய்வதாயும், மநுஷ்யர் அம்மார்க்கம் செல்வதில்லை யென்றும், அங்கே தேவர்கள் ஸஞ்சரிக்கின்றார் என்றும், அதன்மேல் சென்றால் பீமஸேநனை யக்ஷனோ ராக்ஷஸனோ வருத்துவா ரென்றும், இன்னும் யாராவது ஶபிப்பா ரென்றும் சொல்லிமுடித்தார்.

பிறகு பீமஸேநன், "உம்மைத் தர்சித்தேன். எனைக் காட்டிலும் தந்யன் யார்! உமது தர்சநம் தந்தீர். எனை அநுக்ரஹித்தீர். நான் மிகவும் த்ருப்தனானேன். நீர் ஸாகர லங்கந காலத்தில் எடுத்த ரூபத்தைத் தர்சிக்க ப்ரியப்படுகின்றேன்" என்று சொன்னான்.

ஹநுமான் "அந்த ரூபம் உன்னாலாவது, மற்ற யாராலாவது இப்போது பார்க்க முடியாது. அக்காலத்தின் நிலை வேறு. இப்போதியது வேறு. க்ருதயுக காலம் வேறு. த்ரேதாயுக காலம் வேறு. த்வாபரயுகம் இது. நாஶகாலம். அந்த ரூபம் இப்போது எனக்கு இல்லை" என்றனர்.

அதன் மேல் பீமஸேநன் யுகங்களைப்பற்றியும், யுகங்கள்தோறும் தர்மார்த்த காமங்களின் ஸ்வரூபத்தைப்பற்றியும், கர்மங்களைப் பற்றியும், ஆசாரங்களைப்பற்றியும் ஹநுமானைக் கேட்டான். ஹநுமான் விஸ்தாரமாக விடையளித்தார். அதில் சிலவற்றை விவரிப்போம். "க்ருதயுகத்தில் தர்மம் குறைவதில்லை. மநுஷ்யர்க்கு க்ஷயமில்லை. தேவ தாநவ கந்தர்வ யக்ஷ ராக்ஷஸாதிகள் பரஸ்பர

விரோதிகளாய் அப்போதில்லை. அப்போது மநுஷ்யர் க்ரயவிக்ரயம் செய்வதில்லை. ஸாம ருக் யஜுர்வேத விபாகமில்லை. காம்ய கர்மமில்லை. யாவரும் த்யாநபரர்கள். வ்யாதிகள் அப்போதில்லை. அஸூயை, துக்கம், கர்வம், யுத்தம், சோம்பல், த்வேஷம், கோள்சொல், பயம், தாபம், பொருமை இவைகள் இல்லை. அப்போது யோகிகளுக்குப் பரம்ப்ரஹ்மமே பரமமான கதி. அந்த ஸர்வபூதாந்தராத்மாவான நாராயணன் அப்போது சுக்லவர்ணனாய் இருந்தான். அவ்வவர் கர்மங்களில் நிலைகொண்டு ப்ராஹ்மணாதி வர்ணஸ்தர்கள் க்ருதயுகத்தில் உண்டானார்கள். யாவர்க்கும் ஆச்ரயம், ஆசாரம், ஜ்ஞாநம், கர்மம் முதலானவை ஸமமாயிருந்தன. யாவரும் எப்போதும் ஸ்ரீமந் நாராயணனையே உபாஸித்தனர். உபாஸந மந்த்ரம் ப்ரணவம் ஒன்றே. விதி அதன் அர்த்த விசாரம் மாத்ரமே. க்ரியை பகவத் த்யாநமாத்ரமே. காலம் தவருமல், நாலு ஆச்ரமத்துக்கும் பொருந்திய கர்மங்களைப் பலாபிஸந்தியில்லாமல் ஜநங்கள் செய்து மோக்ஷத்தை அடைந்தார்கள். ஸாச்வதமான வர்ணாச்ரம தர்மம் க்ருதயுகத்தில் நான்கு கால்களுடன் கூடியிருந்தது. த்ரேதாயுகத்தில் ஜநங்கள் ஸத்யப்ரதாநர். தர்மத்துக்கு மூன்று கால். ஸ்ரீமந்நாராயணன் ரக்தவர்ணன். மநுஷ்யர் க்ரியாவந்தராய்த் தர்மத்தை ரக்ஷித்தார்கள். அப்போது யஜ்ஞங்கள் ப்ரவர்த்தித்தன. பல க்ரியாகலாபங்களுடன் தர்மம் வளர்ந்தது. பலாபிஸந்தியுடன் க்ரியைகளும் தாநங்களும் பெருகின. ஜநங்கள் ஸ்வதர்மங்களில் நிலைகொண்டனர். த்வாபர யுகத்தில் தர்மத்துக்குக் கால்கள் இரண்டே. பகவான் மஞ்சள் நிறத்தையடைவர். வேதமும் நான்கு விபாகத்தை யடையும். மூன்று வேதமென்றும் நான்கு வேதமென்றும் ஏற்படும். ஸாஸ்த்ரங்கள் பேதிக்கும். க்ரியைகளும் பேதிக்கும். ஜநங்கள் தபஸ்ஸிலும் தாநத்திலும் ப்ரவ்ருத்திப்பார்கள். ஆகிலும் ராஜஸகுணம் அவர்க்குள் மேலிடும். ஸத்வகுணம் குறைபடும். ஒவ்வொருத்தர் தான் ஸத்யத்தில் நிலைகொள்வர். ஸத்யம் துறந்தவர்க்குள் வ்யாதிகள் பெருகும். காமப்ரேரிதராகவும் ஸ்வர்க்காகாங்க்ஷையாலும் ஜநங்கள் யாகம் செய்வார்கள். அதர்மத்தால் ப்ரஜைகள் க்ஷயத்தை யடைவர். கலியுகத்தில் தர்மத்துக்குப் பாதம் ஒன்றே. அது தாமஸயுகம். கேசவனும் க்ருஷ்ணவர்ணத்தை யடைவன். வேதாசாரங்கள், வர்ணாச்ரம தர்மங்கள், யாகக்ரியைகள் இவைகள் இன்மை

யை யடையும். வ்யாதி, அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி, சோம்பல், க்ரோதம் முதலான துர்க்குணங்கள், உபத்ரவங்கள், பசி, பயம் இவை பெருகும். இப்படி யுகதர்மங்கள் மாறுதல்களை அடைகின்றன. இந்தக் கலியுகம் இதோ ஸமீபித்துவிட்டது, என்றிவ்வண்ணம் ஹநுமான் பீமஸேநனுக்கு உரைத்தார்.

பிறகு பீமஸேநன் மறுபடி ப்ரார்த்திக்கவே, ஹநுமான் தான் ஸமுத்ர லங்கநம் செய்வதற்காக எடுத்த ரூபத்தைப் பீமனுக்குக் காட்டினார். அப்புறம் ஸௌகந்திக வநத்தின்பொருட்டு மார்க்கத்தை அர்ஜுநனுக்குக் காட்டிப் பீமனைப் போகச் சொன்னார். அந்த வநமானது யக்ஷராக்ஷஸரால் ரக்ஷிதமென்றும், அவ்விடம் பீமஸேநன் ஸாஹஸம் செய்யக்கூடாதென்றும், பலிஹோம நமஸ்கார மந்த்ரங்களால் தேவர்கள் பூஜிக்கப்பட்டால் அவர்கள் ப்ரஸாதம் செய்வாரென்றும், பீமன் ஸ்வதர்மத்தைப் பரிபாலநம் செய்யவேண்டு மென்றும் சொல்லி அநுஜ்ஞை பண்ணினார். அந்த ப்ரகரணத்தில்,

“ [illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

* * * * * * *

[illegible] ।
[illegible] ॥

𑌪𑌾𑌲𑌨𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌚𑍈𑌵 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍋𑌷𑌣𑌂 ।
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

* * * * * * *

𑌤𑌪𑍋𑌧𑌰𑍍𑌮𑌦𑌮𑍇𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌰𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌦𑌿𑌵𑌂 ।
𑌦𑌾𑌨𑌾𑌤𑌿𑌥𑍍𑌯𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌧𑌰𑍍𑌮𑍈𑌰𑍍 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌦𑍍𑌗𑌤𑌿𑌂 ।
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌪𑌾𑌲𑌨𑍈𑌃 ।"

இந்த ஶ்லோகங்கள் காணப்படுகின்றன. இவற்றின் ஸமுதாயார்த்தம்:— ஆசாரத்தால் தர்மம் உண்டாகின்றது. தர்மத்தில் வேதங்கள் நிலைத்துள. வேதங்களால் யஜ்ஞங்கள் உண்டாயின. யஜ்ஞங்களால் தேவர்கள் நிலைத்துளர். வேதங்களில் கண்ட ஆசாரங்கள் விதிகள் இவற்றின்படி பண்ணப்பட்ட யஜ்ஞங்களால் தேவர்கள் தரிக்கப்படுகின்றனர். ப்ருஹஸ்பதி ஶுக்ரன் இவர்கள் செய்த நீதிகளால் மநுஷ்யர் தரிக்கப்படுகின்றனர். வர்த்தகம், க்ருஷி, பசு போஷணம் இவை முதலான ஜீவநோபாயங்களால் ஸர்வமும் தரிக்கப்படுகின்றது. மூன்று வேதம், தண்டநீதி யெனும் ராஜதந்த்ர ஶாஸ்த்ரம், ஜீவநோபாய ஶாஸ்த்ரம் இம்மூன்று வித்யைகளை அறிந்த த்விஜாதிகளால், அவ்வித்யைகள் நன்கு அநுஷ்டிக்கப்பட்டு லோகயாத்ரை நடக்கவேண்டும். இம்மூன்று வித்யைகளும் தர்மத்தைத் தொடாமல் லோகத்தில் ப்ரயோகிக்கப்பட்டால் லோகம் மர்யாதை யற்றுப்போம். ஜநங்கள் நாசமடைவார்கள். இவை நன்ருக அநுஷ்டிக்கப்பட்டால் ஜநங்கள் தர்மத்தை ஸம்பாதித்துக்கொள்வார்கள். * * யஜ்ஞம், அத்யயநம், தாநம் இவை மூன்று வர்ணஸ்தர்க்கும் ஸமாநம். யாஜநம், அத்யாபநம், ப்ரதிக்ரஹம் இவை விப்ரர்க்கு அஸாதாரண தர்மம். லோகபாலநம் க்ஷத்ரியர்க்கும், யாவருடைய போஷணமும் வைஶ்யர்க்கும் அஸாதாரண தர்மங்கள். த்விஜாதிகளின் ஶுஶ்ரூஷை ஶூத்ரர்க்குத் தர்மம் என்று சொல்லப்பட்டது. * * * தபஸ், தர்மம், இந்த்ரிய நிக்ரஹம், இஜ்யை இவற்றை யநுஷ்டித்து விப்ரர் எவ்வண்ணம் பரலோக மடைகின்றனரோ, அவ்வண்ணமே, தாநம் அதிதிபூஜை முதலானவற்ருல் வைஶ்யரும், துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநத்தால் க்ஷத்ரியரும் பரலோகமடைகின்றனர்.

இவ்விதமாகப் பல தர்மங்களைப் பீமஸேநனுக்கு ஹநுமான் உபதேசித்தார். பிறகு அவனை ஆலிங்கநம் செய்தார். அப்போது பீமஸேநனுக்கு ஸர்வச்ரமமும் நீங்கி மஹாபலம் உண்டாயது. ஹநுமான் கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருக, "வீர! புறப்பட்டுப் போ. பின் காலத்தில் என்னை ஸ்மரி. நான் இங்கிருப்பதை யாருடனும் சொல்லாதே. இப்போது குபேரன் க்ரஹத்தினின்று தேவகந்தர்வ கந்நிகைகள் இப்புறம் ஸஞ்சரிக்க வருவார்கள். உன்னைப் பார்த்து என் கண்கள் களித்தன. உன்னால் ராகவனை ஸ்மரித்தேன். என்னுடைய தர்சநம் உனக்கு மங்களம் உண்டாக்கும். நீ என் ப்ராதாவானதால் வரம் கேள். ஹஸ்திநாபுரம் சென்று த்ருதராஷ்ட்ர புத்ரர்களை நாசம் செய்யவேண்டுமானால் இதோ செய்துவிடுகின்றேன். அந்நகரத்தை த்வம்ஸம் செய்யச்சொன்னால் செய்கின்றேன். துர்யோதநனைக் கட்டி உன்னிடம் கொண்டுவிட வேண்டுமானால் கொண்டுவருகின்றேன்" என்று சொன்னார்.

அதைப் பீமஸேநன் கேட்டு ஸந்தோஷித்து, "வாநரச்ரேஷ்ட! எனக்கு ஸர்வோபகாரமும் செய்தீர். என்னை க்ஷமிப்பீர். என்மீது க்ருபை செய்வீர். உம்மை நாதனாயுடைய பாண்டவர்கள் ஸநாதர்களே! உமது தேஜஸ்ஸால் ஸர்வ சத்ருக்களையும் நாங்கள் ஜயிப்போம்" என்று சொன்னான்.

பிறகு ஹநுமான், "நீ என் ப்ராதா. உன்னிடம் எனக்கு ப்ரியம். ஆதலால் நீங்கள் யுத்தோந்முகர்களாய் ஸிம்ஹநாதம் செய்யும்போது அந்த த்வநியை எனது ஸ்வரத்தினால் வ்ருத்தி செய்கின்றேன். விஜயன் த்வஜத்தில் நின்று தாருண சப்தங்களைச் செய்து உன்னுடைய சத்ருக்களைப் பயமுறுத்துகின்றேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

# ஜநகநந்தினீ.

வைஶாக உத்ஸவம் ஸமீபித்துவிட்டது. அதைக் காட்டும் பல வித ப்ரயத்நங்களை ஊர் ஜநங்கள் மேற்கொண்டனர். பரீக்ஷை கொடுத்துவிட்டு ஸ்ரீநிவாஸன் மாதா பிதாக்களுடன் வந்து வஸித்தான். அம்மான் இல்லத்துக்குப் போனானில்லை. ஆகிலும் ஸந்நிஹித பந்துக்களை முற்றிலும் காணாமல் விடத் துணிந்தானில்லை. அவ்விடம் செல்ல ஜநகநந்தினியும் அவனுக்கு ஓர் ஆகர்ஷகமாயிருந்தாள். ஆழ்வார் திருநாள் வரவும், ஸந்நிதி வீதியில் வாஸம் செய்பவர், விஷ்வக்ஸேநரை அநுயாத்ரையாகப் பின்தொடர்ந்தார்கள். ஸ்ரீநிவாஸனும் கூட நடந்தான். கேசவாசார்யர் வீதியிலிறங்கி ஸேனாநாதனை வந்தநம் செய்துவிட்டு, வேதகோஷ்டியைச் சேர்வதற்குச் சென்றார். வழியில் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தார். "ஸ்ரீநிவாஸா! நீ வந்திருப்பதாய்ச் சொன்னார்கள். ஏன் எங்கள் க்ரஹத்துக்கு வாராமலிருந்தாய்? உன் யோக க்ஷேமத்தைப்பற்றி ஸாவகாசமாய் விசாரிக்கின்றேன்" என்று சொல்லிவிட்டு நடந்தார்.

திருவடி ஸந்நிதியண்டையில் ஸ்ரீநிவாஸன் நின்றுவிட்டான். திரும்புங்கால் அம்மான் இல்லத்துக்குள் சென்றான். ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

"ஸ்ரீநிவாஸா! நீ பெருமாள் கோவிலுக்கு வந்து, ஏன் எங்கள் அகத்துக்கு வரவில்லை? உன் வாசிப்பெல்லாம் முடிந்ததா?" என்று ஹரிப்ரியை சொன்னாள்.

"வாசிப்புக்கு முடிவு முண்டோ? உத்தேசித்தமட்டில் வாசித்தேன்; பரீக்ஷை கொடுத்தேன்; அதில் தேறின விஷயம் இன்னும் தெரியவில்லை. திருக்குடந்தை வாஸம் செய்தேனென்பது

உங்களுக்குத் தெரிந்திருக்குமே. அங்கே ஜநகத்தின் பர்த்தாவைப் பார்த்தேன்" என்று ஸ்ரீநிவாஸன் சொன்னான்.

ஸ்ரீநிவாஸா! மாப்பிள்ளையைப் பார்த்தையோ? அவர் ஸுகமாயிருக்கிறாரா?" என்று கேட்டாள் ஹரிப்ரியை.

"ஸுகமாய் இருக்கின்றார். மஹா ப்ரஹ்மவித்தாய் இருக்கின்றார். அவர் முகத்தில் ப்ரஹ்ம தேஜஸ் ஜ்வலிக்கின்றது" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸா! அவரோடு வார்த்தை சொன்னையோ?" என்றாள் ஹரிப்ரியை.

"அவருடன் வார்த்தை சொல்லுகிறதா? அவர் ஸ்வர்நச்சாயையுடன் அக்நிதேவன் மூர்த்திகரித்து வந்ததுபோல் ப்ரகாசிக்கின்றார். அவரை நான், என்வேஷத்தோடு எவ்வண்ணம் நெருங்கக்கூடும்? எனக்கு அவருடைய தர்சநமாத்ரம் ப்ராப்தமாயிற்று" என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

ஹரிப்ரியை அந்தச் சொற்களைக் கேட்டாள். ஸந்தோஷத்துடன் துக்கமும் கொண்டாள். வைச்வாநரஸமனாய் மாப்பிள்ளை இருக்கின்றாரென்று ஸந்தோஷம்; ஜநகத்தை அழைக்காமலிருக்கின்றாரென்று துக்கம். இவ்வண்ணம் அவள் நிற்கையில், "ஜநகத்துக்கு வயஸாச்சுதே! ஏன் அவளை அவள் பர்த்தா அழைத்துக் கொள்ளவில்லை?" என்று கேட்டான் ஸ்ரீநிவாஸன்.

"அதுதான் எங்கள் கஷ்டம். எத்தனைதரம் எழுதினாலும் ப்ரத்யுத்தரம் தருகின்றதில்லை. பத்மநாபாசார்யரும் உப்பிலியப்பன் கோவிலுக்குப் போய் வந்தார். பெண்ணை அழைத்துக்கொள்வதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையாம். எங்களுக்குப் பகவான் கொடுத்தது ஒரு குழந்தை. அவள் பெண்ணாய்ப் பிறந்தாள். அவளுடைய ஸுகம் அந்யர்களுடைய ஆதீநமா யிருக்கின்றது. அவ்வளவு வாசித்தவராயும் விவேகியாயும் இருப்பவர், எங்களை ஏன் இப்படி துன்பப்படுத்துகின்றாரோ தெரியவில்லை! எங்களுக்கு நல்லகாலம் எப்போது உண்டாமோ?" என்று சொன்னாள் ஹரிப்ரியை.

அதைக் கேட்டு ஸ்ரீநிவாஸன் ஸந்தோஷித்தானில்லை. 'ஜநகநந்தினியைப் பத்நியாகப் பெற்று விச்வஸிக்காமலும் ஒரு புருஷன்

இருப்பனோ' வென்று யோசித்தனன். இதற்குள் ஹரிப்ரியை "ஸ்ரீநிவாஸா! உனக்கு விவாஹத்தில் விருப்பமில்லையா? வயதா யும் ஏன் இப்படி இருக்கின்றாய்?" என்று கேட்டாள்.

"இப்போது கல்யாணயோசனை இல்லை. பின்னால் யோசிக்க லாம்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் புறப்பட்டுப்போ னான். போகுங்கால் ஜநகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் தூதநமாக ஒரு வாட்டத்தைக் கண்டான். சித்தத்தில் வருத்தம் கொண்டான். ஜநகத்துக்கும் தனக்கும் ப்ரஹ்மசர்யந்தான் ஈச்வ ரன் விதித்திருக்கின்றதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

மறுநாள் காலை ஸ்ரீநிவாஸன் வீட்டின் குறட்டின்மேல் நின்றி ருக்கையில் தபால்காரன் வருவதைக் கண்டான். தபால்காரன் ஸ்ரீநிவாஸனிடம் ஒரு கடிதம் கொடுத்தான். ஸ்ரீநிவாஸன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

"உன்னுடைய மாமா கேசவாசார்யர் மாப்பிள்ளை இன்று துர் யாச்ரம ப்ரவேச நிமித்தம் ஸங்கல்பித்துக்கொண்டு ஜீவச்ராத் தம் செய்வித்துக்கொள்கின்றார். நாளை உதயம் ப்ரேஷ மந்த்ரோ ச்சாரணம் செய்வார். இந்தத் துக்க ஸமாசாரத்தை அந்த ஸ்வாமிக் குத் தெரிவித்துவிடு" என்று ஆதிவராஹாசார்யர் எழுதியிருந் தார்.

ஸ்ரீநிவாஸன் ப்ரமைகொண்டான். திண்ணைமீது உட்கார்ந் தான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பெருமாள் மண்டபத் திற்கு எழுந்தருளியிருந்தார். வீதியில் ஜநங்கள் குறைந்து ஸஞ்ச ரித்தார்கள். அவர்களையும் பார்க்க ஸ்ரீநிவாஸன் ஸஹிக்கவில்லை. எழுந்து வேகவதியாற்றை நோக்கிச் சென்றான். ஒரு விவிக்த ப்ர தேசத்தில் மரத்தின் நிழலின் கீழ் அமர்ந்தான். எண்ணமிடத் தொ டங்கினான்:—

"வரதா! நீ வரதர்ஷபனா? இப்படியா ஜநகநந்தினிக்கு வரம் தந்தாய்? "[illegible]" என்று உன்னை வர்ணித்தாரன்றோ? பூர்ண கர்ப் பிணியும் பதிவ்ரதையுமான ஸீதையைக் காட்டுக்கு அனுப்பத் து ணிந்த உனக்கும் தயையுண்டோ? உனக்குப் பேருளாளன் என்று

பெயர் வைத்தார்களே! இது மாத்ரமா? பத்து மாஸம் உடுத்த வஸ்த்ரம் களையாமல் சிறையிருந்த தபஸ்விநியான தேவி, நீ அவ் வண்ணமே தன்னைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அவளை ஸ்நாநம் பண்ணுவித்து ஸர்வாலங்கார பூஷிதையாய் உன் பக்கல் வரவழைத்து, ஜநக்கூட்டத்தின் முன்பாகப் பருஷோக்தி கள் சொல்லித் தீப்பாயச் செய்தனையன்றோ? தேவர்களும் திடுக் கிட்டுப்போய், "உபேக்ஷஸே கயம்ஸீதாம் பதந்தீம் ஹவ்யவா ஹநே" என்று உன்னை வினவவில்லையா? இவ்வண்ணம் நிர்க்ரு ணனை நீ ஜநகநந்தினியின் துயரத்தைக் கண்டும் ஸஹிக்கமாட் டாயோ? ஸீதையின் பெயரை அவள் கொண்டாளென்று தான் நீ அவட்கு இக்கொடுமை புரிந்தனையோ?"

* * * * * *

"கண்டிலரிக் காசினியில் கொடியாயுன்தன்
கல்நெஞ்சம் பலகால்நீ காட்டிநின்றும்
பண்டரக்கன் புலிநுகரும் பசுவென்னத்தான்
பாவைதனைக் கொண்டுசெலப் பார்த்துநின்றாய்
கொண்டமனைக் கிதுசெயுநின் கொடுமைமற்றோர்
கூரழலில் விழவுமிரங் காதேகூறில்
மண்டையுடைத் துயிருணுமக் கள்வர்தாமும்
மாதவநின் கடுமையிலர் மறைமுன்நின்றாய்."

இவ்வண்ணம் உன்னைப் பாடினது உண்மை யன்றோ?

"ப்ராணதார்த்திஹர! அது உன் பிருதன்றோ? ஜநகநந்தினி உன்னைப் பக்தியுடன் வணங்கவில்லையா? அவள் துக்கத்தை நீ இனி எவ்வண்ணம் போக்கப்போகின்றாய்? அவள் புருஷன் இனி க்ரஹஸ்தராகமாட்டாரே! நீ உத்ஸாஹம் பூண்டு உத்ஸவம் கண் டருளுகின்றாய். அவளோ துடிக்கப்போகின்றாள். பரம பாகவ தரான என் அம்மானை நீ இப்படிப் பரீக்ஷிப்பையோ? நிர்தோ ஷையான அவர் பத்நிக்கு இனி என்ன கதி?

"இதோ இந்த வேகவதியைப் பார்! ப்ராணனற்றும் செயலற் றும் கிடக்கின்றதே! ஜநகநந்தினி துயர்க்கடலில் ஆழவே அருக்க னும் கோபங்கொண்டு பூவுலகைக் கொளுத்துகின்றானே! அவள் துன்பப்படவே ஒரு பக்ஷியாவது கூவுகின்றதா பார்! மரங்களில்

ஓரிலேயாவது அசைகின்றதா பார்! அதோ கால் நடைகள் புல்லேத் தொடாமல் வ்யஸநத்துடன் நிற்கின்றனவே! உலகமெல்லாம் துயர்கொள்ள நீ உத்ஸவம் கொள்கின்றையே?

"ஐயோ! நான் என்செய்வேன்! துக்கம் வந்துவிட்டது. இங்கு நான் எண்ண மிட்டுக்கொண்டிருந்தால், அவர்களுக்கு இதை யார் சொல்வார்கள்? எனக்கு இனி என்ன பிழைப்பு! அவள் ஸௌக்யப்படக் கண்டு யான் ஸுகங்கொள்ள எண்ணினேன். அவளேத் தர்சித்துக் களிக்க எண்ணினேன். என்ருகிலும் அவளுடன் ஒரு வார்த்தை சொல்லி அதை நினேத்து நினேத்து ஜீவிக்க எண்ணினேன். ஆஹா! என்ன காலம் வந்துவிட்டது! ஜகம்! இதற்காகவா நீ பிறந்தாய்? இதற்கா உன்னே ஈச்வரன் அவ்வளவு அழகுடன் அமைத்தான்? இதற்கா உன் பிதா உனக்கு அத்தகைய ஜ்ஞாந மளித்தார்? இதற்குத் தானு உத்தம குணங்கள் யாவும் உன்னிடம் குடிகொண்டன?"

இவ்வண்ணம் சிந்தித்துச் சிந்தித்துப் பொழுதுபோக்கினுன். நாழிகை இருபது ஆயிற்று. மீண்டும் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தான். வீதித் திண்ணேயில், பெருமாளுடன் திரும்பிவந்த பிதா வரதாசார்யர் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீநிவாஸனேப் பார்த்தவுடன், "எங்கே போய்விட்டாய்? இதுவரையில் உனக்கு ஆஹாரத்திலும் இச்சையற்றதா?" என்றனர்.

ப்ரத்யுத்தரம் தராமல் ஸ்ரீநிவாஸன் வீட்டிற்குள் நுழையப் போனுன். அவன் முகத்தை ஸமீபத்தில் நோக்கி, "என்ன ஸ்ரீநிவாஸா! உன் முகம் கலங்கி இருக்கின்றதே! கண்கள் செவந்திருக்கின்றனவே! ஓஹோ! நீ மிகவும் கண்ணீர் விட்டிருக்க வேணும். என்ன ஆபத்து வந்துவிட்டது?" என்று அவன் பிதா மொழிந்தார். ஸ்ரீநிவாஸன் தனது கையில் விடாது பற்றியிருந்த கடுதாசியை நீட்டினுன். வரதாசார்யர் அதை வாங்கி வாசித்தார். முகம் குன்றி உட்கார்ந்தவண்ணம் இருந்து விட்டார்.

ஸ்ரீநிவாஸன் வீட்டினுள் புகுங்கால், அவன் மாதா கநகவல்லி அவனே ப்ரதீக்ஷித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவன் சாப்பிடாதபடியால் அவளும் சாப்பிட்டாளில்லே. ஸ்ரீநிவாஸனேக் கண்டவுடன், "குழந்தாய்! உண்டியை மறந்து எங்கே திரியப்

போனுய்?" என்றனள். உடனே அவன் முகத்தைப் பார்த்து, "என் அழுகின்ருய் ஸ்ரீநிவாஸா!" என்று கேட்டாள்.

"ஜநகத்தின் அகமுடையான் ஸந்யாஸம் செய்துகொள்ளுகின்ருரென்று கடுதாசி வந்தது" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"அடி என் கண்ணே! உனக்கிது தலைவிதியா?" என்று கூவிப் புலம்ப ஆரம்பித்தாள். ஸ்ரீநிவாஸனும் கண்ணீர் சொரிந்தான். வாசலில் வரதாசார்யர் உட்கார்ந்துகொண்டே இருந்தார். ஸ்ரீநிவாஸனும் அவன் மாதாவும் தம் பசியை மறந்தார்கள். இவ்வண்ணம் சிலகாலம் கழிந்தது. கநகவல்லி தன் தமையன் இல்லத்துக்குப் போகப் புறப்பட்டாள். வீதித் திண்ணையில் இருந்த வரதாசார்யர் அவளைப் பார்த்தார். "கண்ணைத் துடைத்துக்கொள். வீதியில் உன்னைப் பார்ப்பவர்கள் என்னவென்று கேட்கும்படிச் செல்லாதே. ஊரில் கலக்கத்தை உடனே உண்டாக்கி விடாதே. வந்தது வந்துவிட்டது. இனி அதை மாற்ற எவர்க்குப் பொருந்தும்? புத்திமான்கள் தம் உள்ளம் அறிந்த துக்கத்தை வெளிக்காட்டமாட்டார்கள்" என்று பத்நிக்கு வரதாசார்யர் உபதேசித்தார்.

கநகவல்லி கேசவாசார்யர் க்ரஹத்துக்குள் சென்ருள். ரேழியில் உட்கார்ந்திருந்த தமையனைப் பார்த்தாள். கண்ணீர் விட்டாள். "என் அழுகின்ருய்?" என்று கேட்டார் கேசவாசார்யர். "ஜநகத்தின் அகமுடையான் ஸந்யாஸியாய்ப்போனுராம்" என்று சொன்னுள் கநகவல்லி. "ஆர் அப்படிச் சொன்னது?" என்ருர் கேசவாசார்யர். "ஸ்ரீநிவாஸனுக்குத் திருக்குடந்தையிலிருந்து கடுதாசி வந்தது" என்றனள் கநகவல்லி. கேசவாசார்யர் தலைகுனிந்தார். மற்ருென்றும் பேசினுரில்லை. இவ்வார்த்தைகளை உள்ளே இருந்த ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் கேட்டார்கள். ரேழியை அடுத்த தாழ்வாரத்தில் வந்து நின்ருர்கள். கநகவல்லி உள்ளே சென்ருள். அவளும் ஹரிப்ரியையும் உட்கார்ந்து புலம்பினுர்கள். கண்களில் அவர்க்கு நீர் ஆருகப் பெருகியது. துக்கமிப்ரமான வார்த்தைகள் அவர்க்குள் வளர்ந்தன. ஜநகநந்தினியோ கநகவல்லி உள்ளே நுழையவும் அறைக்குள் சென்ருள். நடந்தவற்றை நன்கு அறிந்தாள். தனக்குப் பதிஸம்யோகம் இல்லையென்று அறிந்தாள். பதியினுடைய தர்சநமும் தனக்கு இனி நேர்

படாதென்று தெரிந்துகொண்டாள். பதிபரிப்ரேக்ஷணம் என்று லோகத்தார் சொல்வதும், ப்ராப்தமாகப் போவதாய்த்தான் நீண்டகாலமாக எண்ணியிருந்ததும், இனி எண்ணத்தகாததென்றும் எண்ணினள். ஆனால் விஷயஸுகமென்பது அவள் சிந்தைக்கெட்டியதன்று. அவள் பெற்ற ஜ்ஞானத்தாலும் அவளுக்கு நேர்ந்த ஸம்ஸர்க்கத்தாலும், அதைப்பற்றிச் சிந்திக்க அவளுக்கு அவகாசம் உண்டானதில்லை. ஆதலால் இழந்துபோனதை அவள் தெளிவாய் க்ரஹித்திலள். லோக வழக்கத்தில், பதிவியோகத்தைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்குப் பெரிதான துக்கமில்லையென்று சொல்வது அவளுக்குத் தெரியும். அது, அவர் உயிர்த்திருக்கையிலேயே அவளுக்கு ஸம்பவித்து விட்டது. இது இவ்வகைப்பட்டது என்று பூர்ணமாக அறிவதற்கு இடமின்றியே, ஒரு பெரிதான விபத்து வந்துவிட்டது என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

அவ்வண்ணமே ஸ்ரீநிவாஸனும் அவன் வீட்டில் துக்கித்துக் கொண்டிருந்தான். உலகவழக்கில் அவனுக்கு அத்தகைய துக்கம் உண்டாகக் காரணமில்லை. ஆனால் ஜநகநந்தினி அவனுடைய ஹ்ருதயத்தில் நிலைத்துவிட்டாள். அவளுடைய துக்கமெல்லாம் அவனுடைய துக்கமாய்ப் பரிணமித்தது. இருவர்க்கும் அதற்குப் பரிஹாரமாக ஒரு உபாயம் யோசிக்கவும் இடமில்லை.

"ஜநகநந்தினியின் அழகும் கல்வியும் மஹாஸுக்ருத பலம். அவள் ஸகல நற்குணமும் பொருந்தியவள். குற்றமற்றவள். மஹாஸுக்ருதம் செய்த புருஷனன்றோ அவளை யடைய வேண்டும். அடைந்தும் விட்டவன் ஜந்மாந்தர துஷ்க்ருத பலத்தை அடைந்தவனே. தானும் கெட்டு அவளையும் கெடுத்தானே! இவ்வளவு நன்றாக அவளை அமைத்து ஈச்வரனும் கெடுத்தானன்றோ? அவள் துக்கத்தில் மூழ்க, யானும் அதில் மூழ்கினவனே!" என்றிப்படி ஸ்ரீநிவாஸன் தன் இல்லத்தில் உட்கார்ந்து யோசித்தனன்.

ஹரிப்ரியையும் கநகவல்லியும் குரல்விட்டு அழுதாரில்லை. ஆகிலும் துக்கத்தால் எழுந்த அவர்களுடைய வார்த்தைகள் அண்டை அசல் வீட்டார்க்குத் தெரிந்தன. கேசவாசார்யருக்கு உண்டான மோஹம் பல விப்ரர்களை வருத்தியது. ஸ்த்ரீகள் ஸ்த்ரீகளுக்கு உபசார வார்த்தைகள் சொல்வதற்காக அவர் க்ரஹத்தில் வந்து கூடினர்கள். பண்டிதர்கள் கேசவாசார்யரை வந்து பார்த்

தார்கள். உபசாரோக்திகள் மொழிந்தார்கள். ஒருவர்க்கும் ஒரு வார்த்தைகூட அவர் சொல்லவில்லை; அவர் கண்ணீர் விட்டாரில்லை. வந்தவர்க்குள் பத்மநாபாசார்யர், “தேவரீர்க்கு இந்தக் கஷ்டம் நேரிட அடியேன் வ்யாஜமானேன். அன்று அவர் நடந்த வகையிலும் வார்த்தை சொன்ன ப்ரகாரத்திலும் நல்ல காலம் வர மாட்டாதென்று அறிந்துகொண்டேன். இந்தப் பெண்ணை இவ்வண்ணம் கெடுத்துவிட அவர்க்கு எப்படி மநஸ் துணிந்ததோ? இதற்குப் பரிஹாரம் சொல்ல யார்க்கு முடியும்? தேவரீர்க்கு ஸர்வார்த்தங்களும் ஸுகிப்ஸிதங்கள். ஜநகத்துக்கு அத்யாத்ம வித்யாப்ரதாநம் செய்திருக்கின்றது. நீங்கள் இருவரும் தத்வஜ்ஞாந வ்யபாச்ரயர்களாய் நின்று இந்த துக்கத்தை த்யஜிக்கவேண்டும். அதற்கு வரதன் ஸஹாய பூதராய் நிற்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன்” என்று சொன்னார்.

இவ்வண்ணம் ஸாயங்காலம் வரையில் காலம் கழிந்தது. கேசவாசார்யர் எழுந்தார். அநந்த ஸரஸ்ஸுக்குச் சென்று ஸந்த்யாவந்தநம் முதலான கைங்கர்யங்களைச் செய்து முடித்தார். பகவான் ஸிம்ஹவாஹந மீதேறித் திருவீதி யலங்கரித்தான். கேசவாசார்யர் வேதபாராயண கைங்கர்யத்தில் வழக்கப்படி அந்வயித்தார். வரதாசார்யர் பார்யை, பெருமாள் எழுந்தருளு மட்டும் வீடுவந்து சேர்ந்தாளில்லை. குமாரனைத் தனியே விட்டுவிட்டுப் பெருமாளுடன் செல்ல வரதாசார்யர் இஷ்டப்படவில்லை. பெருமாள் திருவடி கோவில் ஸமீபத்தில் எழுந்தருளினார். சிறிது காலம் அவ்விடம் நிறுத்தப்பட்டார். ஆனால் கேசவாசார்யர் பார்யையும், கநகவல்லியும், ஜநகநந்தினியும் பகவத் ஸேவார்த்தம் வெளியில் வந்தாரில்லை. அவர்களுடைய துக்கம் அதற்கோர் காரணம். மநம் கலங்கியவர்க்கு முகமும் கலங்கியது. அப்படிப்பட்ட முகங்களுடன் வீதிப்புறம் வர அவர்கள் இஷ்டப்பட வில்லை. அவ்வண்ணம் யாவவராலும் பார்க்கப்படும்படியாக வெளிவர ப்ரியப்பட்டா ரில்லை. பெருமாளும் மண்டபமேற எழுந்தருளிவிட்டார்.

அன்றிராத்திரி கேசவாசார்யர் திரும்பிவந்தவுடன் ரேழியில் படுத்துக்கொண்டார். ஜநகம் அப்போது அவர் ஸமீபத்தில் வந்து நின்றாள். “குழந்தாய்! உன் விஷயமாக நான் எண்ணியிருந்தவற்றை சரண்யன் திருவுள்ளம் பற்றவில்லை. “ஸுநேத்ரா

[illegible] ” என்று அவன் மொழிந்ததாகப் பெரியவர்கள் சொல்வார்கள். ஸ்வாதந்த்ரியத்தால் செய்தானென்றால் நைர்க்ருண்யம் அவனைத் தொடரும். அதை அவன்பேரில் சுமத்த வொண்ணாது. கர்மாத்யக்ஷன் கர்மாநுரூப பலங்களைத்தான் தருவன். இப்படி நமது கர்மம் சிகையறுக்கின்றதென நாம் ஸந்தோஷிக்க வேண்டுமென்று நீ கேட்டிருக்கின்றாய். பகவான் என்றும் நமக்கு ஹிதத்தையே செய்கின்றான் என்று உனக்குத் தெரியும். உனது புத்தியால் உன் மநஸ்ஸை த்ருடப் படுத்திக்கொள். இப்படி உனக்கு ஸமாதாநம் ப்ரயத்நத்தால் உண்டாக வேண்டும். வரதன் உன்னை ரக்ஷிக்கட்டும்” என்று கேசவாசார்யர் சொன்னார். அன்றிராத்ரி அந்த க்ருஹத்தில் நெருப்பு மூட்டப்படவில்லை.

பத்ராதிபர்.

---


ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரு. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 4. | ஸ்ரீ பாகவத தனிஸ்லோகி - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. | ஸ்ரீ சதுஸ்லோகி விவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |

இவை வேண்டுவோர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇
𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 ।
𑌭𑌗𑌵𑌨𑍍 ! 𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌪𑌥𑌃
𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 𑌮𑌾𑌮𑌵𑌲𑍋𑌕𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 ! ॥ 49.

---

49. கீழ் ஶ்லோகத்தால், 'நான் ஶரணாகதன்; ப்ரதிபந்தகங்களை நிவ்ருத்தித்துக்கொள்ளவல்ல ஸாதநாந்தரங்களைச் செய்யவும் அத்யந்தம் அஶக்தன்! ஆகையால், தேவரீர் கேவலக்ருபையாலே என்னை விஷயீகரித்தருளவேணும்' என்று ஸ்ரீ ஆளவந்தார் ப்ரார்த்தித்தார். இந்த ஶ்லோகத்தால், ஶாஸ்த்ரீயங்களான உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதில் தமக்குள்ள அஶக்தியையும் க்ருபா கார்யமான விஶேஷ கடாக்ஷத்தைப் பகவான் அநுக்ரஹிக்கா விட்டால் தமக்கு வேறு உஜ்ஜீவந ஸாதநம் இல்லையென்பதையும் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறார். ஸம்ஸாரத்தை மழைக்காலத்து இருள் நிறைந்த மேகாவ்ருதமான ஒரு துர்திநத்திற்கு ஒப்பிட்டு, தமது அவிவேகத்தை நீருண்ட இருண்ட மேகபடலம் போலவும் தாம் அநுபவிக்கும் பலவித துக்கங்களை அந்த மேகபடலத்திலிருந்து பொழியும் வர்ஷம் போலவும் வர்ணித்துப்பேசி, 'கொடுவினைத் தூற்றுள்நின்று வழி திகைத்து அலமருகின்ற என்னை ஸகல க்லேஶமும் போம்படி நீயே கடாக்ஷித்தருள வேணும்' என்று ப்ரார்த்திக்கிறார்.

“𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇 𑌬𑌹𑍁𑌧𑌾𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌪𑌥𑌃 𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 𑌮𑌾𑌂, 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤! 𑌅𑌵𑌲𑍋𑌕𑌯” என்று அந்வயம்.

𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇 - அவிவேகமாகிற மேக படலங்களால் மறைக்கப்பட்டிருக்கிற திசைகளை யுடைத்தாயிருக்கும். ‘மழைக்காலத்து இருளில் அகப்பட்டுத் திசை தெரியாமல் தடுமாறும் பாந்தன் போல, ஸம்ஸாரிகள், ப்ரக்ருதி ஸம்பந்த மடியாக ஏற்பட்டுள்ள அவிவேகத்தில் அகப்பட்டு, தேஹம் ஆத்மா, ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் ஸ்வரூப ஜ்ஞாந மில்லாமலும் ஹிதாஹித ஜ்ஞாந மில்லாமலும் தட்டித் தடுமாறுகிறார்கள்’ என்பது குறிப்பு.

𑌬𑌹𑍁𑌧𑌾𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 - பஹு ப்ரகாரமாயும் இடை விடாமலும் பலவித துக்கங்களை வர்ஷித்துக்கொண்டிருக்கும். ஸம்ஸாரிகளுக்கு ஏற்படும் துக்கம் பலவகைப்பட்டன. ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என்று அவைகளுக்கு ஒரு விபாக முண்டு; ஶரீர ஸம்பந்தம் பெற்றது, மநஸ்ஸின் ஸம்பந்தம் பெற்றது என்றும் ஒரு விபாகமுண்டு. இவைகளெல்லாம் இங்கு விவக்ஷிதம். அவிவேகத்தை மேகம்போலவும் துக்கங்களை வர்ஷம் போலவும் வர்ணித்ததன் தாத்பர்யமாவது - மேகத்திலிருந்து வர்ஷம் ஜநிக்கிறது போல, அவிவேகத்திலிருந்து துக்கங்கள் ஜநிக்கின்றன என்பதுதான். இதை ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு விவரித்திருக்கிறார் :— “அவிவேகம் துக்கத்தை விளைக்கையாவது — அஜ்ஞாநத்தாலே கர்மமாய், அத்தாலே தேவாதி ஶரீர ப்ரவேஶமாய், அத்தாலே தாபத்ரய ரூபமான துக்கமாயிருக்கும்; ‘பொய்ந் நின்ற ஞாநமும் பொல்லா வொழுக்கு மழுக்கு டம்பும்’ என்கிறபடியே.”

𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 - ஸம்ஸாரமாகிற மழைக்காலத்து இருள் நிறைந்த துர்திநத்தில். மேகாவ்ருதமான பகலுக்கு ‘துர்திநம்’ என்று பெயர்.

வஶ்ம: ஸ்வலிதம் - வழிதப்பி நிற்கும். வழியாவது - கர்ம யோகம் முதலிய உபாயங்கள். அவைகளைச் சரிவர அநுஷ்டிப்ப தற்கு ஸம்ஸாரியானவன் அஶக்தனு யிருக்கிறபடியால் அவன் அந்த வழியிலிருந்து ப்ரஷ்டன் என்று வ்யவஹரிக்கப்படுகிருன்.

ஶாம் - என்னை. "ஃவதூாஃஃஎயம் ஶரணம் ப்ரவநெ" என்று ப்ரார்த்தித்துக்கொண்டு நிற்கும் என்னை - என்பது குறிப்பு. "நான் படுகிற பாடு இதுவானுல், ஶாஸ்த்ரீய அநுஷ்டாநத்திற்கு நான் யார்?" என்பது கருத்து என்றும் சொல்லலாம்.

ஹமவநு! அவ்யுத! - ஹே பகவந்! ஹே அச்யுத! 'என் னுடைய தாபங்களை நிவ்ருத்திப்பதற்கு அபேக்ஷிதங்களான ஜ்ஞாநம் ஶக்தி முதலிய குணங்களை உடையவனே!' என்பது பகவத் ஶப்தத்தால் ஏற்படுகின்றது. 'ஆஶ்ரிதர்களை ஒருகாலும் நழுவவிடுகிறதில்லை என்னும் பெரிய வ்ரதங் கொண்டவனே!' என்பது அச்யுத ஶப்தத்தின் தாத்பர்யம்.

"ஶ தஜ்ஹ தம் ஃஃ"

"ந த்யஜெயம் கயம் வந"

"அடியரை வல்வினைத் துப் பாம்புலனைந்தும்
துஞ்சக் கொடான்"

என்கிறபடியே இவன் 'அச்யுதன்' அன்றே?

அவெஷாகய - கடாக்ஷித்தருளவேணும். 'அந்தக் கடா க்ஷம் ஜநித்தால் ஸகல க்லேஶங்களும் பறந்தோடிப் போய்விடும்' என்பது தாத்பர்யம். பகவானுடைய கடாக்ஷ விஶேஷ மின் றிக்கே எவ்வித உபாயமும் உத்தாரகமாகாது என்பதும் இதனுல் த்யோதிப்பிக்கப்படுகின்றது.

"ஃஎெஷாஸய ஃஷூஃதி ரஷூ விமெவஷூிதொஸயம்
க்லிஷ்டம் ஃமொஸவ்யு விஷயெ நஃ ஃயி ப்ரஸம்மி।
ஊகூம் க்ரவாம் கஶஶஃயி ப்ரணமெதஸவியெஶ!
ஃவாம்ஷொதஶஃம்வஶஜஹவொஸவிஹி ஷெவ ஶெஶ: ॥"

என்று க்ஷத்ரபந்து கதறினுன்றே?

𑌨 𑌮𑍃𑌷𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌮𑍇
𑌶𑍃𑌣𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑍇𑌕𑌮𑌗𑍍𑌰𑌤𑌃 ।
𑌯𑌦𑌿 𑌮𑍇 𑌨 𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑍇 𑌤𑌤𑍋
𑌦𑌯𑌨𑍀𑌯𑌸𑍍𑌤𑌵 𑌨𑌾𑌥 ! 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥ 50

---

50. 'நான் வேறு புகலற்று நிற்கின்றேனே! முன்னிருக்கும் பாழ்ங்கிணறு தெரியாமல் வழிதப்பிப் போகும் குருடன்போல விவேகமின்றிக்கே தாபத்ரயங்களில் போய் விழுகிறேனே! என்னை அநாதரிப்பது உசிதமாகுமோ?' என்று தாம் படுகிற பாட்டைப் பற்றிப் பலவாருகப் புலம்பிவிட்டு, இப்பொழுது, 'ஒருகால் தம்மை ரக்ஷியாமல் பகவான் அநாதரித்து விட்டால், அவருக்கு அநிஷ்டம் ஏதாவது ப்ரஸங்கித்து விடுமோ?' என்று பயப்படுவது போல 'உன் க்ருபைக்கு நானல்லது வேறு விஷயமில்லை. இதை இழந்துவிடாமல் கைக்கொள்ள வேணும்' என்று தமது வேண்டுகோளை விண்ணப்பம் செய்து கொள்ளுகிருர் கீழ் 25-வது ஸ்லோகத்தில், "𑌤𑍍𑌵𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌾𑌭𑌵𑍋 𑌨𑌾𑌥 𑌨 𑌤𑍇𑌽𑌨𑍁𑌰𑍂𑌪𑌃" [என்னுடைய அநர்த்தத்தைப் பரிஹரிக்கச் சொல்லுகிறேனல்லேன்; ஆஶ்ரிதர்க்கு விஷயங்களால் வரும் பரிபவம் ரக்ஷகனான உனக்குத் தேஜோ ஹாநியன்ருே? அதைப் பரிஹரிக்கச் சொல்லுகிறேன்] என்று ப்ரார்த்தித்தது போல, இவ்விடத்திலும் ஶரண்யனுக்கு நேரக்கூடிய அநிஷ்ட ப்ரஸங்கத்தை ஸூசிப்பித்துக் கொண்டு ப்ரார்த்திக்கிறபடி.

𑌨 𑌮𑍃𑌷𑌾 (𑌅𑌵𑌿𑌤𑌥𑌂) 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌏𑌕𑌂 𑌮𑍇 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌂 𑌅𑌗𑍍𑌰𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 - '𑌮𑍇 𑌨 𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿, 𑌤𑌤𑍋, 𑌹𑍇 𑌨𑌾𑌥 ! 𑌦𑌯𑌨𑍀𑌯𑌸𑍍𑌤𑌵 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 !' ॥ [பொய்யன்றிக்கே ஸத்யமாகவும், நிஷ்கர்ஷித்து உறுதியுடனே செய்யப்படுமதாகவுமிருக்கும் என்னுடைய விண்ணப்பத்தை முற்படக் கேட்டருளாய்; அதாவது - என்மீது தயையைச் செய்யாவிட்டால், பின்பு உனது தயைக்குத் தகுந்த பாத்ரமே துர்லபமாகிவிடும்.] "𑌤𑍍𑌵𑌯𑌾𑌽𑌪𑌿

ஸ்யம் ஸமவஸ்தாநீ ஏகாந்தம் பாத்ரமிதம் தயாயாஃ" என்று ஏற்கெனவே சொல்லப்பட்டதானது இவ்விடத்தில் த்ருடீகரிக்கப் படுகின்றது.

ந ம்ருஷா பரமார்த்தமேவ - பொய்யன்று, மெய்யே. 'பொய்யன்று' என்று சொன்னல் போதாதோ? 'மெய்யே' என்றும் சொல்லவேண்டுமோ? என்று ஶங்கிக்கக்கூடும். 'ஒருகால் இரக்கம் பிறக்கைக்காகத் தவறுதலாகச் சொல்லப்படும் வார்த்தையோ இது? என்று பகவான் ஶங்கித்து விடுவனே?' என்னும் பீதியின் பேரில், தாம் சொல்வது உண்மையே என்று வற்புறுத்தும் பொருட்டு இந்த மாதிரி இரண்டு விதமாகச் சொன்னபடி.

ஏகம் மே விஜ்ஞாபநம் - என்னல் நிஷ்கர்ஷித்துச் செய்யப்படும் இந்த விண்ணப்பத்தை. 'ஏகம்' என்பதற்கு 'ஒன்று, மற்றொன்று இல்லை' என்பது அர்த்தம். 'இதுவே எல்லையான நிஷ்கர்ஷம்; இதைத் தவிர்த்து வேறு ஒரு விண்ணப்பமும் நான் செய்துகொள்ளப் போகிறதில்லை!' என்பது தாத்பர்யம். 'ரக்ஷ்யனுகிற எனக்கும் ரக்ஷகனுகிற உனக்கும், இருவர்க்கும் இது லாபகரமாக இருக்கிறபடியால், இதுவே முக்கியமான விண்ணப்பம்' என்பது 'ஏகம்' என்பதன் தாத்பர்யம் என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனுடைய திருவுள்ளம்.

அக்ரதஃ ஶ்ருணு - முற்படக் கேட்டருள வேணும். தமது த்வரையை ஆவிஷ்கரித்துக்கொண்டு 'முற்பட' என்று ப்ரார்த்திக்கிறபடி. "மேல் கார்யம் செய்யிலும் செய்யா தொழியிலும் அவதாநம் பண்ணிக் கேட்டருள வேணும்" என்பது ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் திவ்ய ஸூக்தி. ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனே 'அதி தூரத்தில் நின்று கொண்டு மற்றொரு வ்யக்தியின் முகமாக நான் இந்த விண்ணப்பத்தைச் செய்து கொள்ளவில்லை; நேரிலேயே விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன்' என்பது தான் 'அக்ரதஃ' என்னும் பதத்தின் தாத்பர்யமென்று திருவுள்ளம் பற்றுகிறார்.

ஜெ ந தயிஷ்யஸெ யதி - என்மீது க்ருபை செய்யா விட்டால். 'நான் உபாயாந்தர லேஶத்தையும் அறியேன்; அபராத ஸஹஸ்ரத்திற்குப் பாத்ரமாகவும் இருக்கிறேன்; எனக்குக் கிடைத்திருக்கும் துக்க பாகமோ அளவற்றது. ஆகையினால், உனது தயையினாலேமட்டில் ரக்ஷிக்கத் தகுந்த என்னை உபேக்ஷிப்பது ந்யாய்யமன்று' என்பது இவ்விடத்தில் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

ததொ ஹெ நாய! தயநீய ஸ்தவ தாநுஸஹ: - பின்பு ஹே நாத! தயைக்குத் தகுந்த பாத்ரமே உனக்கு அரிதாகிவிடும். 'உனது தயையோ லௌகிகர் தயை போல்வதன்று; கணக்கற்ற அபராதமிருந்தாலும், அவை யெல்லாவற்றையும் பொறுத்துப்போகுமளவு அது எல்லையில்லாத ப்ரசார முள்ளதாயிற்றே! அந்தத் தயைக்குப் பூர்ண ப்ரசாரம் வேண்டுமானல், என்னைப் போன்ற ஸாபராதனன்றோ அபேக்ஷிதமாகும்? அப்படிப்பட்ட ஸாபராதன் என்னைத் தவிர்த்து மற்றுமொருவன் உளனோ?' என்று இந்த வாக்யத்தினால் தமது மஹாபராத ஸ்வபாவத்தை வெளியிடுகிறார். 'தவ தயநீய:' என்று 'தவ' என்னும் பதத்தை 'தயநீய:' என்னும் பதத்துடனும் அந்வயிக்கலாம். 'நாய' என்னும் ஸம்புத்தியினால், 'உனக்கு வேறு தயநீயன் துர்லபன்போல எனக்கும் வேறு பரண்யன் துர்லபன்' என்பது வெளியாகின்றது. கீழ் விவரிக்கப்பட்டிருப்பது போல இப்படிச் சொல்வதன் தாத்பர்யம் தமது மஹாபராத ஸ்வபாவத்தை வெளியிட்டு அதனால் ஒருவித நைச்ய அநுஸந்தாநம் செய்வதே தவிர, உண்மையாகவே பகவானுக்கு ஒரு அநிஷ்ட ப்ரஸங்கத்தை ஸூசிப்பிக்கவாவது, தமக்கு ஒரு ஏற்றத்தைக் காண்பிக்கவாவது சொன்னது அன்று. "ஸ ஜஹாத்மா ஸுது-லஹ:" என்னும் வாக்யத்தை ஸ்ரீ பெரிய வாச்சான்பிள்ளை இவ்விடத்தில் அநுஸந்தாநம் செய்தால், அது ஸ்ரீ ஆளவந்தாரைக் குறித்து பகவானுக்கு உதிக்கும் புத்தியைக் குறித்தபடி. 'இவர் மஹத்தான அநுதாபத்தைக் கொண்டிருக்கிறபடியால், இவர் நமது தயைக்கு உத்தமமும் அரி

தஃஹம் கூவஃரதெ ந நாயவாநு
ஊஃரதெ கூவம் ஓயநீயவாஹ வ ।
வியி நிஃுத ஜெதஃநூயம்
ஹமவநு ! வாஸய ஊா ஹூ ஜீஹவஃ ॥ 51.

---

துமான ஒரு பாத்ரம்' என்று பகவான் திருவுள்ளம் பற்றுகிறது போலும்.

51. சலிகையுள்ள ஒரு ஸ்த்ரீ தனது பர்த்தாவை நோக்கி, எவ்வித பாத்யமும் இல்லாத ஒரு விஷயத்தில் ஒரு வித பாத்யத்தைப் பாராட்டிக்கொண்டு தனது மநோரத பூர்த்தியைக் கேட்பது போல, ஸ்ரீ ஆளவந்தார், 'ஹே பகவந் ! நீயே தயாவான், நானே தயநீயன் ; நம்மிருவர்க்கும் இந்த ஸம்பந்தம் விதியால் வாய்த்திருக்கிற படியால், அதைக் கைவிடாதே ரக்ஷித்தருள வேணும்' என்று தமது மநோரத பூர்த்தியைப் பெரியதொரு பாத்யத்துடன் போலக் கேட்டருளுகிறார்.

'பகவான் நிரங்குசமான ஸ்வாதந்த்ர்யத்தைக் கொண்டவனுயிற்றே ! கேட்பார் ஒருவருமில்லாததால், அந்த ஸ்வாதந்த்ர்யத்தைக் கைப்பற்றி விதியால் வாய்த்திருக்கும் இந்த ஸம்பந்தத்தையும் ஒரு கால் உதறிவிடுவனோ ?' என்னும் பயமும் ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்தில் இச்சமயத்தில் உதித்தது போலத் தோன்றுகின்றது. 'விதியால் வாய்த்திருக்கும் இந்தஸம்பந்தத்தை நீ ஒன்றும் பண்ணவொண்ணுது' என்று ஒரு பாத்யத்துடன் சொல்ல ப்ரவ்ருத்தித்தவர், 'வாஸய' என்றும் 'ஊா ஹூ ஜீஹவஃ' என்றும் ப்ரார்த்திக்கிறுரன்றே ?

'தஃ கூவஃரதெ ஃஹம் நாயவா நூ ; ஃஃரதெகூவம் வ ஓயநீயவா நூ ; ஹெ ஹமவநு ! வியி நிஃுதஜெத ஃநூயம் வாஸய, ஊா ஹூ ஜீஹவஃ' என்று அந்வயம்.

தஃ - ஆகையினுல், 'நான் செய்துகொண்ட விஜ்ஞாபநம் மெய்யாயிருக்கிறபடியால்' என்பது தாத்பர்யம்.

த்வத்³ருதே(அ)ஹம் நாத²வாந்ந - உன்னைத் தவிர்த்து எனக்கு வேறு நாத னில்லை. 'நீ ஸர்வ ஶக்தன், பரம காருணிகன்; ஆகையால், நீயே ஶரண்யன்' என்கிறபடி. 'கிழே விழுந்தவுடன் அழும் குழந்தைக்கு அதன் துக்கத்தைப் பொறுக்கமாட்டாதே எடுக்க ஓடிவரும் மாதா முதலியவரே ஶரண்யராவதுபோல, ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டு அதனுல் மஹத்தான துக்கங்களை அநுபவிக்கும் எனக்கு 'ப்⁴ருஶம் ப⁴வதி து³:கி²த:' என்கிறபடி என் துக்கத்தைப் பொறுக்க மாட்டாமல் என்னிலும் அதி துக்கிதனாக இருக்கும் நீயே ஶரண்யனுகிறாய்' என்பது தாத்பர்யம். பிறருடைய துக்கத்தைப் பொறுக்க மாட்டாமையே தயையாகிறபடியால், அப்படி அதைப் பொறுக்காமல் இருப்பவனே தயாவானுகிறான்.

த்வம் ச மத்³ருதே த³யநீயவாந்ந - என்னை விட்டால் உனக்கு தயநீயன் என்பவனே அரிதாகி விடும். 'அளவற்ற அபராதங்களைச் செய்தவனாகவும், அது காரணமாக அநந்தங்களான துக்கங்களை அநுபவிக்கிறவனாகவும் இருக்கும் நானே உனது தயைக்கு விஷயமாகக் கடவேன். என்னைக் கை விட்டால் 'உனது தயையென்னும் குணமே வ்யர்த்தமாகிவிடுமன்றோ?' என்பது தாத்பர்யம்.

ஹே ப⁴க³வந் - ஸகலமும் தெரிந்த பகவானே! 'நமக்குப் பரஸ்பரம் இம்மாதிரியான ஸம்பந்தம் ஒன்று இருக்கின்றது என்பதை உனக்கு நான் அறிவிக்கவும் வேண்டுமோ?' என்பது குறிப்பு.

விதி⁴நிர்மிதமேதத³ந்வயம் பாலய - விதியால் வாய்த்திருக்கும் இந்த ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தத்தை ரக்ஷித்தருள வேண்டும். 'விதி' என்று பகவானைப்பார்க்கிலும் உயர்ந்த வஸ்து வொன்று உண்டோ? என்று ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். ஏதோ ஒரு ஸுக்ருதவிஶேஷமடியாக ஒருகால் ஸம்பவிக்கும் பகவத் க்ருபையே;

இவ்விடத்தில் 'விதி' என்னும் பதத்தால் குறிக்கப்படுகின்றது. நம்மால் பரிஹரிக்க வொண்ணாததை நாம் 'விதி' என்று சொல்லுகிறோம். இந்த ஸம்பந்தமும் பகவானாலேகூடப் பரிஹரிக்கக் கூடாதது என்பதை த்யோதிப்பிக்க 'விதி' என்னும் பதத்தை இவ்விடத்தில் ப்ரயோகித் திருக்கிறார். 'தாயதிநம்போலத் தானாகவே இந்த ரக்ஷணம் எனக்கு ப்ராப்தம்' என்பதைச் சொல்லவன்றோ ஸ்ரீ ஆளவந்தார் இவ்விடத்தில் உபக்ரமித்தது ?

'வாஜய' என்பதற்கு - 'ரக்ஷிக்கவேண்டும்' என்பது அர்த்தம். 'ஹுஜி' என்னும் தாதுவுக்கு 'பாலநம்' 'புஜிப்பது' என்று இரண்டு அர்த்தங்கள் இருப்பதை ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, இவ்விடத்தில் 'வாஜய' என்னும் பதத்திற்கு 'புஜித்தருள வேணும்' என்னும் ஒரு அர்த்தாந்தரத்தைக் கல்பித்திருக்கிறார். இந்த அர்த்தாந்தரம் கடிக்குமானால், அந்த அர்த்தாந்தரத்தினால் ஏற்படும் ஸ்வாரஸ்யம் மிகச்சிறந்ததே ! 'ஹே பகவன் ! இந்த ரக்ஷணம் கேவலம் எனக்கு மட்டில் லாபகரமென்றிருக்க வேண்டாம்; உனக்கும் லாபகரமே' என்பதை, 'வாஜய' என்னும் பதத்திற்கு ஏற்படும் 'புஜித்தருள வேணும்' என்னும் அர்த்தாந்தரம் த்யோதிப்பிக்கின்றதாம்.

ஊ ஹு ஜீஹவ: - இந்த ஸம்பந்தத்தைக் கை விடக்கூடாது. 'நீ நிரங்குஶ ஸ்வதந்த்ரனாகிறபடியால் எதையும் அதிக்ரமித்து நடக்கக்கூடியவனாச்சுதே ! விதி நிர்மிதமாயிருக்கும் இந்த ஸம்பந்தத்தையும் ஒருகால் நீ அதிக்ரமித்து விடுவாயோ ?' என்று பயந்து 'இதைக் கை விடக்கூடாது' என்று ப்ரார்த்திக்கிறார். தவிரவும், 'ஹே பகவன் ! நான் அளவற்ற துஷ்கர்மங்களைச் செய்திருக்கிறபடியால், அந்தத் துஷ்கர்மங்களின் பலமாக ஒருகால் நான் இந்த ஸம்பந்தத்தைக் கை தவிர்த்து ஓட விரும்பினாலும், நீ என்னை அப்படி ப்ரவ்ருத்திக்காமல் தடுக்க வேண்டும்' என்றும் தாத்பர்யம்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# தென்கலை வடகலை த்வேஷம். 3.

"I shall only take notice, with a real grief of heart, that the minds of many good men among us appear soured with party-principles, and alienated from one another in such a manner as seems to me altogether inconsistent with the dictates either of reason or religion."

[Addison.

ஒரு தேசத்திற்கு க்ஷோபத்தை விளைவிக்கும் ஹேதுக்களுள், ஜநங்கள் ஒருவருக்கொருவர் கக்ஷி ப்ரதிகக்ஷிகளைச் செய்துகொண்டு த்வேஷத்தைக் கொண்டாடுவதைவிட மிகவும் உக்ரமான ஹேது வேறொன்று மில்லையென்றே சொல்லலாம். இந்தக் கக்ஷி ப்ரதிகக்ஷி ஸ்திதியின் பரிணமங்கள் பலவகைப்பட்டன. கீழ்ச் சொல்லியிருக்கிறபடி இது அந்தஶ்சித்ரத்திற்குக் காரணமாகி ஶ்ரேயஸ்ஸுக்கு ஹேதுவாயுள்ள ஐகமத்யத்தை அழிப்பதுடன், நமக்கு அவஶ்யம் வேண்டுவனவான வேறு நன்மைகளை ஸாதித்துக்கொள்வதற்கும் பெருத்த இடையூறாக நிற்கின்றது. தவிரவும், கக்ஷி ப்ரதிகக்ஷிகளால் ஸம்பவிக்கும் உத்வேகம், ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலுமுள்ள காமம் க்ரோதம் முதலிய ஶத்ருவர்க்கங்களைப் போஷித்து, அதுவழியாக ஜநங்களுடைய ஸ்வபாவத்தையும் புத்தி ஶக்திகளையும் நீசங்களாக மாற்றுவதற்கு முக்கிய காரணமாகின்றது. அந்த உத்வேகம் ஹ்ருதயத்தில் நிற்கும் வரையில், நாம் வேறு பலவித பரித்ராணம் செய்துகொண்டபோதிலும், நமது ஸத் ஸ்வபாவத்தை அழியவிடாமல் காப்பாற்றுவது அஸாத்யமே. இதை அறிந்த பெரியோர்கள், ஒருபொழுதும் இந்த உத்வேகத்திற்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், கால விஶேஷங்களில் ஶத்ரு விஷயத்தில் அதை நாம் செலுத்தினாலும், அதனால் அது ஒருவிதப் போக்கைப் பெற்றுப் பிறகு காலாந்தரங்களில் நம்மை மீறி நமது ஸுஹ்ருத்துக்களிடத்திலும் உதாஸீநர்களிடத்திலும் ப்ரவஹித்து அளவற்ற தீமைகளை விளைவிக்குமென்றும், ஆகையால், இந்தத் துஷ்ட பரிசயத்திற்குப் பாத்ரமாகாமலே நமது மநஸ்ஸை நாம் காப்

பாற்றிவர வேண்டுமென்றும் போதிப்பித்திருக்கிறார்கள். ராகத்வேஷாதிகளின் ப்ராபல்யம் கேவலம் விஷயத்தைமாத்திரம் சார்ந்தது அன்று ; அவைகள் பெற்றிருக்கும் போஷணத்தையும் பொறுத்தது.

“ இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: ”

என்பதுபோல, இவைகளும், ப்ரஸரமகப்படுமிடத்தில் நம்மை மீறி நடக்கும் ஸ்வபாவமுள்ளவைகளே. இவை நிரர்க்களமாக ப்ரவஹிக்கும் காலங்களில் நமது ஆத்யந்திக நாஶத்தையும், துர்பலமான அணைகளால் தேங்கப்பெறுங் காலங்களில், அஸத்ய வசநம், பரதூஷணம், அபூத அபவாதங்கள், தர்ம க்லாநி இவை முதலிய முறைகளின் வழியாகப் பிச்சுண்டு வெளிக் கிளம்புவதையும் நாம் பார்க்கலாம். சில ராக்ஷஸப் பூண்டுகள் வளருமிடத்தில் பயிர்கள் க்ஷயத்தை அடைவதுபோல, இவை காடு பெறும் தேஶத்தில், தயை க்ஷாந்தி ஸௌஹார்த்தம் முதலிய ஸாத்விக குணங்களின் பீஜம்கூட நஶித்துவிடும்.

இது மாத்திரமன்று. இந்த உத்வேகமடியாக மநஸ்ஸில் ஒரு பக்ஷபாதம் ஜநிக்கவே, விவேசந ஶக்தியும் குறைவடைந்து, அஶிக்ஷித மதிகளான பாமர ஜநங்கள்போல வித்வஜ்ஜநங்களும் குணதோஷ விசாரங்களில் தடுமாறுவதும் உண்டு. அத்யந்தம் மிதஜ்ஞர்களான சிலர் பக்ஷபாதிகளால், பெரிய வித்வான்கள்போலப் பஹுமதிக்கப்படுவதும், பெரிய வித்வான்களில் அநேகர், கக்ஷிவிரோதத்தினால், ஒன்றும் அறியாதவர்கள்போல அவமதிக்கப்படுவதும் ஸஹஜமாகும். முற்காலத்தில், ஜ்ஞாந விஶேஷத்தினாலும் ஶக்தி விஶேஷத்தினாலும் பெரியோர்கள் க்யாதி பெற்றதுபோல, இந்த உத்வேககாலங்களில் பெரியோர்களெல்லாரும் தமது கக்ஷியிலுள்ள ஆக்ரஹ விசேஷத்தினாலேயே க்யாதியை அடைகிறார்கள். அபஶத தமங்களான பத்ரங்கள் குணங்களால் நிறைந்தவைபோல ஆதரிக்கப்படுவதையும் ஶ்லாக்யங்களான க்ரந்தங்கள் உபயோகமற்றவைபோல அநாதரிக்கப்படுவதையும் யார் அறியார்? இம்மாதிரியான விருத்த பாவனைகள், ஆதியில் பக்ஷபாத மடியாக ஏற்பட்டபோதிலும் காலக்ரமேண ஸ்வாபாவிகங்களாகவே ஆகிவிடுகின்றன. கெட்டதை நல்லதென்றும், நல்லதைக் கெட்டதென்றும், ஒருவன் முதலில் புத்தி பூர்வமாகப் பாவித்து வந்தாலும், ஸ்வல்ப காலத்தில் இயற்கையாகவே குணதோஷங்களைச் சரிவரப் பராமர்ஶிப்பதிலுள்ள ஶக்தி விஶேஷத்தை அவன் இழந்துவிடுகிறான். இம்மாதிரியான ஶக்திக்குறைவு பஹுஜநங்களுக்கு ஸம்பவித்தால் அது தேஶத்திற்கு க்ஷோபகரமன்றோ?

தவிரவும், இந்த உத்வேகத்தின் பரிணாமம் மற்றொரு விதமாகவும் காணப்படுகின்றது. அஸத்துக்களால் நிறைந்துள்ள ப்ரதேஸத்தில் அபூதங்களான பல ஜநஸ்ருதிகள் ஏற்படுவது உண்டு. இந்த ஜநஸ்ருதிகளில் எவை ஸ்ரத்தேயங்கள்? எவை கேவலம் மித்யை? என்பதைப் பராமர்ஸித்து அவைகளை யதோசிதம் ஸம்பாவிப்பது பெரியோர்களுக்கு லக்ஷணமாகும். கக்ஷி ப்ரதிகக்ஷிகளின் கொண்டாட்டம் இருக்குமிடத்தில், இம்மாதிரியான ப்ரயாலோசனையே காணப்படுகிறதில்லை. விருத்த கக்ஷியைச் சேர்ந்தவனைப் பற்றிச் சொல்லப்படும் எவ்வித அபவாதமும் தத்யமாகவே க்ரஹிக்கப்படுகின்றது. இந்த அபவாதங்களை ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான ஆதாரங்கள் போலப் பாவித்து, தமது மநஸ்ஸாக்ஷ்யத்திற்கு விருத்தமாகவே மேன்மேல் அதுமாக ஸஹஸ்ரங்களைச் செய்வதும் அவைகளைப் பரவவிடுவதும் அவைகளைப் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் ஆநந்தாநுபவம் செய்வதும் இவர்களின் கார்யமாகின்றது. நிந்தைக்கு அநர்ஹர்களாக இருக்கிறவர்களில் அநேகர் நிந்திக்கப்படுகிறார்கள்; ஸ்தோத்ரத்திற்கு அநர்ஹர்கள் ஸ்துதிக்கப் படுகிறார்கள். ஸ்துதியும் நிந்தையும் இவ்விதமாக அநர்ஹர்களிடத்தில் ப்ரயோகிக்கப் பட்டால், லோகத்தில் 'ஸ்துதி நிந்தைகள் ஸதஸத் ப்ரவ்ருத்திகளுக்கு ஹேதுக்கள்' என்பதே இல்லாமற் போய்விடாதோ? இது ஜகத்திற்கு க்ஷேமத்தின் பொருட்டு ஆகுமோ?

இப்பொழுது நமது தென்கலை வடகலைகக்ஷி ஸம்பந்தமான உத்வேகம் இருக்குமிடத்தில், இந்த மூன்றுவித பரிணாமங்களும் பூர்ணமாகத் தென்படுகின்றன. ஆக்ரஹத்தின் ஸதத பரிசய பலமாக ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டும் தூஷித்துக்கொண்டும், ஸர்வகாலத்திலும் அந்த த்வேஷத்தின் அநுத்யாகத்தினால் தமது அந்தக்கரணத்திற்கே ஒருவித காலுஷ்யத்தை ஸம்பாதித்துக் கொள்வதும், ஸ்வ பக்ஷத்திலுள்ள குருட்டுத்தனமான அபிநிவேஸத்தினாலும் பரபக்ஷத்திலுள்ள நிஷ்காரணமான அப்ரீதியினாலும் குண தோஷ பராமர்ஸத்தைப் புத்திபூர்வகமாகவே பிசகாகச் சிரகாலம் செய்து, அது காரணமாக, நமக்கு இயற்கையாலாவது ஸம்ஸ்காரத்தினாலாவது கிடைத்திருக்கும் ஸதஸத் விவேசக ஸக்தியைக் குறைத்துக் கொள்வதும், தமது கக்ஷியிலுள்ள ஆவேகாதிஸயத்தினால் அபூதங்களான அபவாதங்களை ஸாத்விகர்களின் ஹ்ருதயம் புண்படும்படிக்கும் பகவானுக்கு அப்ரீதி ஜநிக்கும் படிக்கும் பரவச்செய்து கொண்டு அதனால் லோகத்திற்குப் பெருத்த தீங்கை விளைவித்துக் கொள்வதும் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஸாமாந்ய க்ருத்யங்களாகவே இருக்கின்றன. அத்யந்தம் அநிஷ்டமான இந்த ஸ்திதி ஸ்ரீ வைஷ்ணவ ஜாதிக்கே க்ஷோபத்தை ஜநிப்பித்துவிடாதோ?

இந்த ஸ்திதியின் அநிஷ்ட ஸ்வபாவத்தை நன்ருக உணர்ந்திருக்கும் பரிகணிதர்களான பெரியோர்கள்தாம் நம்மை இந்தத் துர்தசையிலிருந்து ஸம்ரக்ஷிக்க வேண்டும். இரண்டு கலைகளிலும் அப்படிப்பட்ட நிஷ்பக்ஷபாதிகளான ஸாதுக்கள் பலர் இருக்கிருர்கள். ஆனல், கேவலம் ஸாதுத்வத்தையே அவர்கள் முன்னிட்டுக்கொண்டு லௌகிக வ்யாபாரங்களிலிருந்து உபரதர்களாய்க் கொஞ்சம் விலகிநிற்கவே, ஸ்வார்த்தபரர்களாயும் விஷமத்தில் ஆசையுள்ளவர்களாயும் ஆஸ்திக்ய கந்தமுமின்றிக்கே வர்த்தித்து வரும் ஆஸுரப்ரக்ருதிகளான துர்ஜநர்களுக்கும், ஜந்மாந்தர துர்வாஸனையினல் ஆக்ரஹத்திலேயே அபிநிவிஷ்டர்களாய் ஸ்வ ப்ரயோஜநத்தையும் இழந்து கேவலம் க்ரோதமாகிற பிஶாசத்தின் த்ருப்தியைப் பரம ப்ரயோஜநமாகத் தேடும் ஸ்வபாவமுள்ள துராக்ரஹிகளுக்கும் விஶ்ருங்கலமான ப்ரசாரம் ஸம்பவித்துவிட்டது. ஒவ்வொரு திவ்யதேஶத்திலும் இம்மாதிரியான மஹான்கள் சிலர் ஸேவை ஸாதித்து வருகிருர்கள். த்ருஷ்டர்களான பெரியோர்களைக் கண்டால் அவர்களை அநுஸரித்து நடப்பது போல நடிப்பதும், ஸாதுக்களைக் கண்டால் அவர்களை மருட்டுவதும், காலாநுகுணமாகப் பொய் பேசுவதும் கோள் சொல்வதும், இதரர்களுக்குள் பேதோபாயத்தை ப்ரயோகித்து அதனல் அவர்களுக்குள் பரஸ்பரம் த்வேஷத்தையும் கலஹத்தையும் வ்ருத்திசெய்வதுமே இவர்களுடைய ஸார்வகாலிக வ்யாபாரமாக இருக்கின்றது. மஹாஸதஸ்ஸுகளில் இந்தத் துஷ்டர்களுக்குப் பெருத்த புரஸ்காரம் நடப்பதையும் அக்ர ஸம்பாவனைகள் செய்யப்படுவதையும் பார்க்கும் நமக்கு அநேக ஸமயங்களில் அளவற்ற ஶோகம் ஜநித்திருக்கின்றது. காலமும் இந்தத் துர்ஜநர்களுக்கு அநுகூலமாகவே இருக்கிறபடியால், அவர்களுக்கு அதிமாத்ரம் அநுகுணமான உயர்ந்த பதவி ஏற்படுவதுடன், மஹாஜநங்களுக்கு 'இதைச் செய்; இதைச் செய்யாதே' என்று விதாநம் செய்யும் ஒரு வித அதிகாரமும் ஸம்பவிக்கின்றது. இவர்களுடைய ப்ரசாரம் பக்நமானல், இப்பொழுது தென்படும் கலஹம் ப்ராயேண ஶாந்தமாகிவிடு மென்றே நாம் நினைக்கிருேம். ஒருவருக்கும் எவ்வித தீங்கையும் செய்யாமலே இந்தப் பங்கத்தை ஏற்படுத்த வேண்டு மென்பது நம்முடைய அபிஸந்தியானதால், அதற்கு அதிகாரிகளான ஸம லோஷ்டாஶ்மகாஞ்சநர்களாயும் பகவந் முகோல்லாஸம் தவிர்த்து மற்றை எதையும் பெரிதாக நினைக்காதவர்களாயும் பக்ஷபாத கந்தமுமின்றிக்கே ஜகதுஜ்ஜீவநத்தில் ப்ரவ்ருத்தர்களாயு முள்ள மஹான்களே, பகவத் கைங்கர்யத்தில் இந்த க்ருத்யமும் அந்தர்பூத மென்பதை உணர்ந்து, இது விஷயத்தில் ஔதாஸீந்யத்தை வஹிக்காமல், பத்தகங்கணர்களாய் ப்ரவ்ருத்திக்க வேண்டு மென்பது தான் நமது ப்ரார்த்தனை.

அந்த அந்த இடங்களில் தனிகர்களாக இருக்கும் ப்ரபுக்களும் இந்த ப்ரவ்ருத்தியில் யதோசிதம் ஸஹாயம் செய்ய வேண்டும்.

“ஸமாநீ வ ஆகூதி: ஸமாநா ஹ்ருத³யாநி வ: ।
ஸமாநமஸ்து வோ மநோ யதா² வ: ஸுஸஹாஸதி ॥ ”

என்கிறபடி அர்த்தத்தைக் கொண்டு மற்றை யெல்லாவற்றையும் ஸாதித்துக் கொள்வது இக்காலத்தில் ஸாத்யமானதால், ப்ராக்ருத துர்ஜநர்களின் விஷயத்தில் அந்த அர்த்த பலத்தைக் குறைப்பதற்காகவே நமது ப்ரவ்ருத்தியில் தனிகர்களுடைய உதவியை நாம் அபேக்ஷிக்கிறோம். இப்படி ஆஸ்திகர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து யத்நம் செய்தால், அதைத் தடுத்து நிலை பெற்று நிற்கும் க்ஷோப ஹேதுவு முண்டோ? ஜகத்தின் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்து ஆதியில் பகவானால் ப்ரவர்த்திதமாயும், பிறகு ஜகத்திற்குப் பரமோபகாரர்களான நாத யாமுந ராமாநுஜ முனி ப்ரப்ருதிகளால் ஸம்வர்த்திதமாயுமுள்ள இந்த ஸ்ரீ வைஷ்ணவமதம், வீணில் க்ஷோபத்தை அடைந்துவிடும் போல இருக்கின்றதே! என்பதை ஆலோசித்து, ஜகத்தின் க்ஷேமத்தைத் தேடும் எல்லாரும் ஒரே மதியுடன் இந்த ப்ரவ்ருத்தியில் இறங்க க்ருபை செய்தருள வேணும்.

தே³வ த்வதீ³ய சரணத்³வய ப்ரவீண-
ராமாநுஜாய விஷயீக்ருத ஸம்ப்ரதா³ய: ।
க்ருத்யாதி³ ஶிவ ஸம்வதா³ப்⁴ய
வர்ஷம் ஶ்ரிவஸ்தம் விஶாத³ விதா⁴ ॥

[ ஸுதர்ஶந ஸூத்ரதா.

“This thirst of kindred blood, my sons, detest;
Nor turn your force against your country's breast.” [ Dryden.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## வ்யாகரண ஸூத்ரத்தில் ஒரு ஸம்ஶயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

“உத: ஸ்தாஸ்தம்போ: பூர்வஸ்ய” என்னும் ஸூத்ரத்திற்கு, ‘உத்’ என்பதைக் காட்டிலும் பரமாயிருக்கிற ‘ஸ்தா’ ‘ஸ்தம்ப்’ என்னும் தாதுக்களுக்குப் பூர்வ ஸவர்ணம் வருகிறதென்று எல்லாரும் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். பூர்வம் ‘உத்’ இருக்கிறபடியால் அதன் ஸவர்ணம், ‘ஜயோ: பூர்வஸ்ய’ என்னும் ஸூத்ரப்படிக்கு ‘ஸ்தா’ ‘ஸ்தம்ப்’ தாதுக்களின் ஆதியான ஸகாரத்திற்கு வரவேண்டும். இவ்விடத்தில், ‘உத்’ என்னும் ஸமுதாயத்திற்கு ஸவர்ணமான வர்ணம் அப்ரஸித்தமாக இருக்கிறபடியால், ஸகாரத்திற்குப் பூர்வ ஸவர்ணாதேஶம் எப்படி ஸம்பவிக்கும் என்று ஒரு ஶங்கை ஜநிக்கின்றது.

‘உத் ஸம்பந்தியான தகாரத்திற்கு எது ஸவர்ணமோ, அதுதான் ஆதேஶமாக வருகின்றது’ என்னும் ப்ரத்யுத்தரம் சொல்வது ஸரியன்று. ஸூத்ரத்தில் ‘உத:’ என்று ‘உத்’ என்னும் ஸமுதாயமே பூர்வத்வேந நிர்தேஶிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? ஸூத்ரங்களில் எல்லாவிடத்திலும், பூர்வத்திலும் பரத்திலும் எது எது நிர்த்திஷ்டமாக இருக்கின்றதோ அது அதுவே பூர்வம் பரம் என்று வ்யவஹரிக்கப்படுகின்றது. அந்தக் காரணத்தினாலேயே, ‘ச்வ்ருத்தாந்தகாரணஸ்யாத ஊதள’ என்னும் ஸூத்ரத்தில் ச்வ்ருத்தைக் காட்டிலும் ‘ஊத்’ ஶப்தம் பரமாக இருக்கையில் வாலெதா வியீயசோ ந மான பரரூபம் பூர்வத்வேந நிர்த்திஷ்டமாயிருக்கும் ச்வ்ருத்த ஸமுதாயத்திற்கு வருகிறதே தவிர, ச்வ்ருத்தத்தின் தகாரத்திற்கு வரவில்லை. அதுபோல இவ்விடத்திலும் ‘உத்’ என்பதே பூர்வமாக இருக்கிறபடியால், அந்த ஸமுதாயத்தின் ஸவர்ண வர்ணாதேஶமே ப்ராப்தமாக வேண்டும். அப்படிப்பட்ட ஸவர்ண வர்ணம் அப்ரஸித்தமானதனால், கீழ்க் குறிக்கப்பட்டுள்ள தாதுக்களுடைய ஸகாரத்திற்கு எப்படி ஸவர்ண வர்ணாதேஶம் வரும் என்னும் ஶங்கையை ஸஹ்ருதயர்கள் பரிஹரிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

சென்னை, }
20-10-16. }

தி. கிருஷ்ணமாசார்யர்.

[இந்த ப்ரஸ்நத்திற்கு ஶாஸ்த்ராபிஜ்ஞர்கள் யதோசிதம் ஸமாதாநம் செய்வார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனாலும், அடியேனுக்கு ஒருவித மான ஸமாதாநம் ஸ்புரிக்கின்றது ; அதை இப்பொழுது விஜ்ஞாபநம் செய்து கொள்ள அடியேன் துணிவதை அபிஜ்ஞர்கள் க்ஷமித்தருள வேணும்.

'ஸூத்ரங்களில் பூர்வத்திலும் பரத்திலும் நிர்த்திஷ்டமாக இருக்கும வையே 'பூர்வம்' 'பரம்' என்று வ்யவஹரிக்கப்படுகின்றன' என்று ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யரால் உதாஹரிக்கப்பட்டிருக்கும் ந்யாயம் ஸரியான ந்யா யமே. ஆனால், அதன் ப்ரவ்ருத்தி அஸங்குசிதமென்று அடியேனுக்குத் தோ ன்றவில்லை. "ஈவ்ருதோ நம் ஸூரஸவர்த தேவி" என்னும் ஸூத் ரத்திலேயே இந்த ந்யாயத்தின் ஸங்கோசத்தைக் காணலாம். 'ஐதள வெ(ர' என்று சொல்லி யிருக்கிறபடியால், ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யரு ருடைய ந்யாயப்படிக்கு 'ஐதி' ஶப்தத்தின் ஸ்தாநத்தில் க்ருத்ஸ்நாதே ஶம் ப்ரஸங்கிக்க, அது ஸரியன்று என்றும், 'ஐத் ஶப்தம் பரமாக இருக் கையில்' என்று சொன்ன போதிலும் 'ஐத்' ஶப்தத்தின் ப்ரதமமான ஐகாரத்தின் ஸ்தாநத்திலேயே பரரூபம் வருகின்றதென்றும் பெரியோர்கள் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்களன்றோ? அதுபோலவே, ப்ரக்ருத ஸூத்ரத்தி லும், "உஃ வரயோஃ" என்று சொல்லியிருந்த போதிலும், பூர்வ மான 'உஶ' ஶப்தத்தின் ஸவர்ணம் அப்ரஸித்தமானபடியால், பூர்வநிமித் தமான 'உஶ' ஶப்தத்தின் ஊகாரத்தினுடைய ஸவர்ணமே ஆதேஶமாக வருகின்றது என்று வ்யாக்யாநம் செய்யவேண்டும்.

எஸ். வாஸுதேவன்.]

(2)

ஸ்ரீ. வே. தி. பத்ராதிபருக்கு :—

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் ஏற்பட்டு பஹு காலமாகின்றது. அப்படி இருக்க ஸ்வல்ப திநங்களுக்குமுன் சென்னையில் ஶைவ ஸித்தாந்த ஸங்கமொன்று சேர்ந்ததாகவும், அதில் ஊர்த்வ புண்ட்ரம் அஶாஸ்த்ரிய மென்றும், நவீநமென்றும் சில நிர்ணயங்கள் செய்யப்பட்டவையாகவும் பத் ரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது.

"யுூர்த்வ புண்ட்ரம் வரமேஶிதாரம்

நாராயணம் வஹிரஷிரேஷி வேஷ்யம்"

என்று மஹோபநிஷத்தில் சொல்லி யிருக்கின்றதன்றோ? ஊர்த்வ புண்ட் ரத்திற்கு இதைத் தவிர்த்து மற்றை என்ன ப்ரமாணங்கள் இருக்கின்றன

வென்றும், எந்தக் காலத்தில் இந்தப் புண்ட்ரம் ஏற்பட்ட தென்றும் ஶ்வேத ம்ருத்தை உபயோகிக்க ப்ரமாணம் எது வென்றும், ஸ்ரீ சூர்ணம் மத்தியில் இருக்க வேண்டியதற்கு ப்ரமாணம் எது வென்றும், ஸ்ரீ வேதாந்த தீபிகை யை ஆதரித்து வரும் பெரியோர்களில் யாராவது அடியேன் பேரில் க்ருபை செய்து விஶதமாக நியமிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

நளஹுப
ஆவணிமீ 16வ. } கண்டனூர் - மா. வேங்கடாசார்யன்.

## விளம்பரங்கள்.

### (1)

### ஆர்ய தர்மம்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில், நம்முடைய ஆர்ய ஸநாதந தர்மத்தை நிலைநிறுத்தி வ்ருத்தி செய்வதற்காக "ஆர்ய தர்மம்" என்னும் பெயருடன் தமிழ் பாஷையில் ஒரு மாஸாந்தரப் பத்ரிகை சென்ற ராக்ஷஸஹுப வைஶாக ஶுத்த பஞ்சமீ முதல் ஸ்ரீ மடத்திலிருந்து வெளியாகி வருகின்றது. இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 3.

ப. பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரி,
ஸ்ரீ மடம் ஆஸ்தாந பண்டிதர்
கும்பகோணம்.

---

### (2)

### விஷ்ணுஸ்தல மஞ்ஜரீ.

ஸ்ரீ ஆழ்வார்களால் மங்களாஶாஸநம் பெற்றுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுடன் புராண ப்ரஸித்தங்களான ஐம்பது புண்ய க்ஷேத்ரங்களும், புராண ஐதிஹ்யங்களும், அவற்றிற்குச் செல்லும் வழிவகைகளும், அவ்வழியிலுள்ள சத்திரம் சாவடிகளும், அவற்றிற் கருகிலுள்ள விநோத காட்சிகளும், சுருக்கமாயும் விளக்கமாயும் இப்புத்தகத்தின்கண் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்தல யாத்ரை செய்வோர்க்கு, இது, இன்றி யமையாத வழித்துணைவன் போன்ற தோர் நூல். இதன் விலை அணா 8.

எம். ஸி. பட்டாபிராம முதலியார்,
பிரம்பூர், சென்னை.